வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 10.10.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 309 | பக்கங்கள் : 20



08 இலங்கையையும் தாக்கும் பண்டோரா ஆவண கசிவு!


09 தமிழ் தலைமைகளின் ஐக்கியத்தை வலியுறுத்தும் இந்தியா


10 இரகுநாத குமாரதாஸ மாப்பாண முதலியார்


13 ஒரு திருடன் நிகரில்லா வீரனான கதை


# ஒப்பற்ற தலைமகனை வழியனுப்பிவைப்போம்

## அகில இலங்கை இந்துமா மன்றம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 10

“எல்லாக் கோயில்களிலும் நல்லூர் கந்தனின் சிறப்பைப் பின்பற்ற வைத்த ஒப்பற்ற தலை மகனை அனைவரும் மீள நினைந்து பிரார்த்தித்து வழி அனுப்பிவைப்போம்.”

- இவ்வாறு நல்லூர் கந்த சுவாமி கோயில் அறங்காவலர் மாப்பாண முதலியாரின் பிரிவு குறித்து அகில இலங்கை இந் துமா மன்றத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வெளி யிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்

19

# நல்லூர் ஆலயத்தின் நிர்வாகி மாப்பாண முதலியார் சிவபதம்

## இன்று காலை 10 மணிக்கு இறுதிக்கிரியை



யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி யான இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று சிவபதமடைந்தார்.

அவர் கடந்த வாரம் நோய் வாய்ப்பட்டு கொழும்பு வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று காலை

19

# அரசின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்

## ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் வீரவன்ஸ



கொழும்பு, ஒக்ரோபர் 11

“மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாமல் எதிர்பார்க்காத பல்வேறு விடயங்களை அரசு செய்ய முயன்றதன் காரணமாக இன்று அரசின் மீது மக்கள் நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர்.”

-இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன் னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ.

19

## எனது சட்ட மூலத்தை உபயோகித்து

# சட்ட திருத்தத்தின் ஊடாக அரசு மாகாண தேர்தலை நடத்தலாம்

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்

வவுனியா, ஒக். 10

எனது சட்டமூலத்தை உப யோகித்து ஒரு சட்ட திருத் தத்தை உடனடியாக செய்து மாகாண சபை தேர்தலை நடத் தலாம் என்ற கருத்தை பல உறுப் பினர்கள் வெளிப்படுத்தியிருந் தார்கள் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச் சாளருமான எம் ஏ. சுமந் திரன் தெரிவித்தார்.

19

# ‘சிங்கம் நரியாகிவிட்டது’

## பொன்சேகாவை விமர்சித்த அமைச்சர் சி.பி.ரத்னாயக்க



கொழும்பு, ஒக். 10

“சிங்கம்போல யுத்தத்தை முடிந்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பாராளுமன்றம் வந்த பிறகு நரிபோல செயற்படுகின்றார்.” -

19

# நேற்று 726 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக். 10

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 726 பேர் நேற்று அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட

19

# 5 வயது மகளுக்கு வாயில் சூட்ட கொடூர தாய் கைது!



கிளிநொச்சி, ஒக். 10

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகர் குடியிருப் புப் பகுதியில் 5 வயது மகளுக்கு நெருப் பால் சுட்ட தாய் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

தாயார் சமைத்து வைத்த உணவின் அப்பளத்தை குறித்த சிறுமி தாயாருக்குத் தெரியாமல் எடுத் துச் சாப்பிட்டுள்ளார்.

19

# கோப்பாய் வீடொன்றில் திருடியவர் யாழ்.நகரில் நேற்று மாலை கைது!

யாழ்ப்பாணம், ஒக். 10

கோப்பாயில் நேற்று முன் தினம் பட்டப்பகலில் வீடு புகுந்து 10 தங்கப் பவுண் நகை களைத் திருடிய இளைஞன் ஒருவர் நேற்று மாலை யாழ்ப் பாணம் நகரில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இணுவிலைச் சேர்ந்த 21 வயதுடைய

19






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

ஈழநாடு ஆசிரியத் தலையங்கம் குறித்து கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்த குற்றச்சாட்டு குறித்து நேற்றைய தினம் இந்தப் பத்தியில் எழுதியிருந் தேன்.

அதனைப்படித்த நண்பர் ஒருவர், தொடர்புகொண்டு தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டார்.

“‘பொன்னம்பலம் தன்னை பிரபாகரன் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார் போல” என்று அவர் என்னிடம் கேட்டமை ஏன் என்று புரியவில்லை.

“அதை அவரிடமெல்லோ கேட்கவேண்டும்” என்றேன்.

“அப்படி நினைச்சாலும் அதுக்கு நான் என்ன செய்யவேணும் என்கிறீர்?” என்று அவரிடமே கேட்டேன்.

“அது இல்லை ஐசே, நேற்று உம்மட பத்தியைப்படிச்ச பிறகுதான், அவர் இதுதொடர்பாக விளக்கமளித்த ஊடகவியலாளர் சந்திப்பில் என்ன சொன்னவர் எண்டதை தேடிப்பார்த்தன்.

“அந்த ஊடக சந்திப்பை முழுசா பார்க்க கிடைச்சுது.

“யாழ்ப்பாணத்திலை இந்திய வெளியுறவுச்செயலாளர் கொடுத்த இரவு விருந்திலை தான் என்ன சொன்னனான் எண்டதை விலாவாரியாக விளக்கமளிச்சதை நீரும் பாத்திருப்பீர்தானே? தான் ஒற்றையாட்சிக்குள்ள தீர்வு தேவை எண்டதை வலியுறுத்தியதாக சொன்னதைப்பற்றி மட்டும்தான் நீர் சொல்லியிருந்தனீர். ஆனால் அவர் அதைவிட முக்கியமான ஒரு விசயத்தை சொன்னவர். நீர் அதைக்கவனிக்க இல்லைப்போல?” என்று கேட்டார்.

“அவர் அதைப்பற்றித்தானே ஈழநாடு தவறாக எழுதிப் போட்டுது எண்டு கொதிச்செழுந்தவர். அதுதான் அதைப்பற்றி மட்டும் எழுதினனான்” என்றேன்.

“இல்லை, அவர் இந்தியாவின்ர பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற எந்த விசயத்தையும் வடக்கு கிழக்கிலை செய்யவிடமாட்டம் எண்டுமெல்லோ இந்திய வெளியுறவுச் செயலருக்கு உறுதியளிச்சவர். கோட்டாபய வடக்கு கிழக்கிலை என்ன செய்யவேணும் எண்டாலும் தன்னட்டை கேட்டுத்தான் செய்யவேணும் எண்டு சொல்லியிருக்கிறாரா அல்லது, இவர் விடாவிட்டால் கோட்டாபயவால ஒண்டும் செய்யமுடியாது எண்டு றாரோ?”

நண்பர் கேட்டுக்கொண்டே இருந்தார்.

அப்போதுதான் நண்பர் ஆரம்பத்தில் இந்த பொன்னம் பலம் தன்னை பிரபாகரன் என்று நினைத்துக்கொண்டிருக் கிறாரா என்று கேட்டதன் பொருள் விளங்கியது.

அவர்கள் இருக்கும்வரை வடக்கு - கிழக்கில் அரசாங் கம் எதனைச் செய்ய நினைத்தாலும் செய்யக்கூடிய நிலைமை இருக்கவில்லை.

ஆனால் நிலைமை இப்போது அப்படியில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

வவுனியாவில் நமது வெடுக்குநாறி மலையிலுள்ளள லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபடவே முடியாத நிலையில் இருக்கும் நாம், இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாதகமான ஒன்றையும் வடக்கு கிழக்கில் அரசாங்கம் செய்வதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று அவர் சொன்னதைக் கேட்டு இந்திய வெளியுறுவுச் செயலரே தனக்குள் சிரித்திருப்பார்.

அதிகம் ஏன், பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் சில விடயங் களையாவது தடுக்கலாம். அல்லது தடுக்க முயற்சிக்கலாம்.

வடக்கு மாகாணசபை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆட்சியில் இருந்தபோது, இந்த மாகாணத்திலுள்ள தொல்லியல் இடங்களை பாதுகாக்க மாகாணத்திற்கான சட்டங்களை இயற்றி அதனை ஆளுநர் ஏற்கமறுத்திருந்தால் அதனை நீதிமன்றம் கொண்டுசென்று போராடியிருக்கலாம்.

எல்லாச் சந்தர்ப்பங்களையும் கோட்டை விட்டவர்கள் நாங்கள்.

இப்போது இருக்கின்ற மாகாணசபையையும் பதின் மூன்றையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று அடம்பிடிக்கின்ற கஜேந்திரகுமார், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அரணாக இருப்பாராம்.

இந்தியாவுக்கு தன்னை பாதுகாக்க முடியாது என்று அவர் நினைக்கின்றாரோ தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# தொற்றுக்கு உள்ளான கர்ப்பிணிகளுக்கு கொரோனாவுக்குப் பிந்திய நோய் நிலை

கொழும்பு, ஒக். 10

கொரோனா வைரஸ் தொற் றுக்கு உள்ளான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, கொரோனா வுக்கு பிந்நிய நோய் நிலைமை கள் பதிவாவதாக மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் வைத்திய நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.



இது ஒரு தீவிர நிலை இல்லை என்றாலும், இதற்கு உரிய சிகிச் சைகளை மேற்கொள்வது அத்தி யாவசியமாகும் என மகப்பேறி யல் மற்றும் பெண்ணோயியல் விசேட வைத்திய நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கொரோனா வைரஸ் தொற் றுக்கு உள்ளாகி குணமடைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 4 வாரங்களின் பின்னர் சுவாச கோளாறு ஏற்படக் கூடும்.

தசை வலி, சோர்வு மற்றும் முழங்கால் வலி போன்ற நிலை மைகள் குறித்து எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கொரோனாவுக்கு பிந்திய நிலை கர்ப்பிணித் தாய் மார்களையும் பாதிக்கிறது எனக் கூறலாம். இந்த நிலை 6 மாதங்கள் வரை நீடிக்கும். இது ஒரு தீவிர நிலை அல்ல. இருப்பி னும், நீங்கள் கர்ப்பிணித் தாயாக இருந்தால், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இருந்தால் கொவிட் நிலை குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட ஏதேனும் சிரமங்கள் இருந்தால், மகப்பேறியல் மற்றும் பெண் ணோயியல் மருத்துவ நிபு ணரை அணுகுவது சிறந்தது- என்றார்.

# பாறையிலிருந்து விழுந்த இருவர் பரிதாப மரணம்!

கொழும்பு, ஒக். 10

ஹாலிஎல, ஜகுல்ல நீர்வீழ்ச் சிக்கு அருகிலுள்ள பாறையிலி ருந்து விழுந்து இருவர் மரணமடைந்துள்ளனர்.

43, 25 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு உயிரிழந் துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

தனியார் ஒப்பந்த நிறுவன மொன்றில் பணியாற்றி வரும் ஜேசிபி இயந்திரத்தின் சாரதியும் மற்றுமொரு நபருமே மரண மடைந்துள்ளனர்.

குறித்த இருவரும் உடனடி யாக மீட்கப்பட்டு வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டனர் என்று பதுளை பொது வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவின் பிரதான வைத்தியர் பாலித ராஜபக்ஸ தெரிவித் துள்ளார்.

குறித்த இருவரும் எதற்காக பாறையின் மீது ஏறினர் என்று இதுவரை கண்டறியப்பட வில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## கல்வி tv CHANNEL-1

**10.10.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**10.10.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
10.10.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# அமெரிக்க எதிர்ப்பு?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரது பதியேற்பு உரையின் போது, ஒரு முக்கியமான விடயத்தை குறிப்பிட்டிருந்தார். அதாவது, இலங்கை நடுநிலை வெளிவிவகார கொள்கை ஒன்றை பின்பற்றப் போவதாகவும், பலம் பொருந்திய நாடுகளின் அதிகார போட்டிக்குள் தாம் பங்குகொள்ள விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார், அத்துடன், மேற்குலக நாடுகளின் முதலீடுகளை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார். குறிப்பாக சில நாடுகளின் பெயர்களையும் அவர் அப்போது உச்சரித்திருந்தார் . அதாவது, அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து முதலீடுகளை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலோட்டமாக பார்த்தால் இது சாதாரணமான ஒரு விடயம் போன்று தெரியலாம் ஆனால், ஜனாதிபதி குறித்த நான்கு நாடுகளின் பெயர்களை எழுந்தமானமாக உச்சரிக்கவில்லை. அதற்கு பின்னால் ஓர் அரசியல் இருக்கின்றது! அதாவது, அண்மைக்காலமாக ஆசிய பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுவரும் சில மூலோபாய நகர்வுகளை தெளிவாக புரிந்து கொண்டதன் அடிப்படையிலேயே, ஜனாதிபதி குறித்த நாடுகளின் பெயர்களை உச்சரித்திருந்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உச்சரித்த மேற்படி நாடுகள் அனைத்தும் இந்தோ-பசுபிக் மூலோபாயத்தின் அங்கத்துவ நாடுகளாகும்.

எதிர்காலத்தில் இந்த நாடுகள் அனைத்தும் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ அடிப்படையில் மிகவும் நெருக்கமாக செயற்படவுள்ள நாடுகள். இந்தோ-பசுபிக் கூட்டு தொடர்பில் சீனா கடும் அதிருப்திகளை கொண்டிருக்கின்றது. 'குவாட்' எனப்படும் நாற்புற பாதுகாப்பு கலந்துரையாடலை, சீனா ஆசியாவிற்கான நேட்டோ என விமர்சித்துவருகின்றது. சீனாவை ஒரு எல்லைக்குள் முடக்கும் நோக்கிலேயே அமெரிக்கா இந்த நகர்வுகளுக்கு தலைமையேற்றிருப்பதாகவும் குற்றம்சாட்டிவருகின்றது. இவற்றை தெளிவாக புரிந்து கொண்டதன் காரணத்தினாலேயே, தனது முதலாவது உரையிலேயே, தாம் நடுநிலையான ஒரு வெளிவிவகார கொள்கையை பின்பற்றப் போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அண்மையில் இந்திய வெளிவிவகாரச் செயலரை சந்தித்த போதும், ஜனாதிபதி, இந்த விடயங்களை வேறு ஒரு கோணத்தில் நினைவூட்டியிருக்கின்றார். அதாவது சீனா தொடர்பில் சந்தேகம் கொள்ள வேண்டாம். இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை அனுமதிக்காது, அத்துடன், இந்திய முதலீட்டாளர்களை வரவேற்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டாலும், இந்திய, அமெரிக்க முதலீட்டாளர்கள் நாட்டுக்குள் வருவது தொடர்பில் வலுவான எதிர்ப்புக்கள் காணப்படுகின்றன. அண்மைய நாட்களாக, கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை, அமெரிக்க நிறுவனம் ஒன்றிக்கு வழங்குவதை பொதுஜன பெரமுனவின் பங்காளிகளும், தெற்கின் சிங்கள தேசியவாத தரப்புக்களும் கடுமையாக எதிர்க்கின்றன. இதிலுள்ள முரண்பாடான விடயம் இவ்வாறானவர்களின் ஆதரவுடன்தான் ராஜபக்ஷக்கள் மீளவும் வெற்றி பெறவும் முடிந்தது. இந்த இடம்தான் சிக்கலானது. தேர்தல் காலத்தில் இந்திய அமெரிக்க எதிர்ப்பை, உள்ளூர் அரசியலில் ஒரு முதலீடாக பயன்படுத்திக் கொண்டு, பின்னர் ஆட்சியமைத்ததும் இந்த நாடுகளின் முதலீடுகளை வரவேற்பதாகவும் கூறுவது சிக்கலானது.

ஆனால் சீனாவின் இராட்சத திட்டங்கள் தொடர்பில் பாரிய எதிர்ப்புக்கள் காண்பிக்கப்படவில்லை. அனைத்தும் சுமூகமாகவே நடக்கின்றன. அவ்வாறாயின் சிங்கள தேசியவாத அரசியலில், இயல்பிலேயே இந்திய மற்றும் அமெரிக்க எதிர்ப்புக்கள் ஆழமாக வேரூன்றியிருக்கின்றதா? யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில், அமெரிக்க நிறுவனம் முதலீடு செய்வதால், இலங்கை மக்களுக்குத்தான் நன்மை. இதனால் அமெரிக்காவிற்கு எந்தவொரு நன்மையும் இல்லை. ஓர் உலக சக்தியான அமெரிக்காவிற்கு இது போன்ற சிறிய முதலீடுகளால்தான் தங்களது நலன்களை வெற்றிகொள்ள வேண்டுமென்னும் அவசியம் இல்லை.

உண்மையில், இந்தோ-பசுபிக் மூலம் நன்மைகளை பெறுவதற்கான சாதகமான வாய்ப்புக்களை இலங்கை கொண்டிருக்கின்றது ஆனால், அதற்கான பலமான உள்ளக அரசியல் சூழலை இலங்கை கொண்டிருக்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்னை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருப்பதும், இலங்கையின் உள்ளக அரசியலில் காணப்படும் மிகப்பெரிய பலவீனமாகும். பொறுப்பு கூறல் விகாரத்தை வெளிப்படை தன்மையுடன், சர்வதேச நியமங்களின் அடிப்படையில் முன்னெடுக்காத வரையில், இலங்கை ஒரு பலமான உள்ளக அரசியலை கொண்டிருக்கவே முடியாது. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமால் பொருளாதாரத்திலும் முன்னோக்கி நகர முடியாது.

# சீனாவின் புதிய சமூக சமத்துவ கொள்கை பிற நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

**கரிஷ்மா வாஸ்வானி**

*ஏழைகள் - பணக்காரர்கள் இடைவெளியை குறைக்கும் தனது கொள்கைகள், பொருளாதார பாதையை வடிவமைக்கும் இந்த தருணத்தில் அவசியமான ஒன்று என சீனா தெரிவித்துள்ளது.*

*இந்த 'பொது வளம்' திட்டம் நாட்டு மக்களை நோக்கிய திட்டம் என்றாலும், உலகின் பிற பகுதிகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்று.*

*அதாவது 'பொது வளம்' என்பது பணக்காரர்களுக்கும் ஏழை மக்களுக்கும் இருக்கும் இடைவெளியை குறைக்கும் ஒரு திட்டம்.*

*இதில் தெளிவாக தெரியும் ஒரு விளைவு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சீனா அளிக்கும் முன்னுரிமை உள்ளூர் சந்தைகளின் பக்கம் திரும்பும் என்பது.*

*சீனாவை சேர்ந்த தொழில்நுட்ப பெரு நிறுவனமான அலிபாபா, இந்த பொது வளத் திட்ட செயல்பாடுகளுக்கென்று ஒரு தனி குழுவை அமைத்துள்ளது. இந்த பொதுவள திட்டத்திற்கு 15.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியாக ஒதுக்கியுள்ளது அலிபாபா நிறுவனம்.*

*நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாங்கள் பயன் அடைந்ததாகவும், நாடும் பொருளாதாரமும் நன்றாக இருந்தால்தான் அலிபாபா நிறுவனமும் நன்றாக இருக்கும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*அலிபாபா நிறுவனத்தின் போட்டி நிறுவனமான டென்செண்ட் இந்த திட்டத்திற்கு பங்களிக்க உறுதி அளித்துள்ளது. 7.75 பில்லியன் அமெரிக்க டொலர்களை அந்த நிறுவனம் ஒதுக்கியுள்ளது.*

*பொதுவளம் என்பது சீனாவின் வளர்ந்து வரும் மத்திய தர வர்கத்தினரை இலக்கு வைப்பது. எனவே இந்த வாடிக்கையாளர்களை இலக்கு வைக்கும் சர்வதேச வர்த்தகங்களுக்கு இது ஒரு ஆதாயம்தான்.*

*"இளைஞர்கள் வேலை வாய்ப்பை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது நல்ல விஷயம்" என சீனாவில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக சபையின் தலைவர் ஜோர்ஜ் வுட்கே தெரிவித்துள்ளார். நடுத்தர வர்க்கத்தினர் வளர்ந்தால் அது அதிக வாய்ப்புகளை உருவாக்கும் என்கிறார் அவர்.*

*இருப்பினும் அதிக பணம் புரளும் வர்த்தகங்கள் சரிவை காணலாம் என வுட்கே எச்சரிக்கிறார்.*

*"சர்வதேச அளவில் சீனர்கள் 50 சதவீத அளவில் விலையுயர்ந்த பொருட்களை வாங்குகின்றனர். பணக்கார சீனர்கள் சுவிஸ் கைகடிகாரங்கள், இத்தாலிய டைகள் மற்றும் ஐரோப்பிய சொகுசு கார்களை வாங்குவதை நிறுத்தி விட்டால் இந்த துறை பலத்த அடி வாங்கும்." என்று எச்சரிக்கிறார் வுட்கே.*

*ஒரு சீனரின் சராசரி வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கும் அவர், 'பொதுவான வளம்' திட்டம் அதற்கான தீர்வை வழங்காது என்று தெரிவித்துள்ளார்.*

*சீனாவில் உள்ள பிரிட்டிஷ் வர்த்தக சபையின் ஸ்டீவன் லின்ச், இந்த பொது வள திட்டம் சீனாவில் உள்ள நடுத்தர வர்க்கத்தினர் கடந்த 40 வருடங்களில் வளர்ச்சி அடைந்தது போல வளர்ச்சி அடைவர் என்பதற்கான எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை என்று தெரிவிக்கிறார்.*

*"முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு சீன குடும்பம் மாதம் ஒரு முறை டம்பிளிங்கை (மோமோஸ்) உண்ண முடியும். இருபது வருடங்களுக்கு முன்பு வாரம் ஒரு முறை அதை அவர்கள் உண்ண முடியும். பத்து வருடங்களுக்கு முன்பு தினமும் உண்ணும் அளவிற்கு நிலைமை மாறியது. தற்போது அவர்கள் ஒரு காரை வாங்க முடியும்" என்கிறார் அவர்.*

*அலிபாபா மற்றும் டென்செண்ட் போன்ற நிறுவன்ங்கள் சமூகம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட உறுதியளித்துள்ளதை தவிர இது வரை இந்த பொதுவள திட்டம் எந்தவித திடமான மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்கிறார் லின்ச்.*

*"அதேபோன்று திடீரென பல துறைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அது ஒரு உறுதியற்ற நிலையை உருவாக்கியுள்ளது. பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது. உள்நாட்டு உற்பத்தி நோக்கி அவர்கள் திரும்பினார்கள் என்றால் பிற நாடுகள் அவர்களுக்கு தேவையில்லையா?"*

*இந்த பொதுவள திட்டம் என்பது சீன சமூகத்தை அதிக சமமான ஒன்றாக மாற்றுவது. சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியும் இதைதான் சொல்கிறது. எனவே சர்வதேச அளவில் சோஷியலிசம் என்ற கூற்றின் விளக்கத்தை இது மாற்றும் வல்லமை கொண்டது.*

*சோஷியலிசம் என்னும் தத்துவத்தில் சீன அம்சத்தை பொறுத்தி வேறு ஒரு புதிய வடிவத்தில் உலகின் பிற நாடுகளுக்கு வழங்க சீனா விரும்பினால் அதற்கு இந்த பொதுவள திட்டம் சரியானது இல்லை என சீனாவை கண்காணிக்கும் பலர் தெரிவிக்கின்றனர்.*


*இந்து 'பொதுவான வளம்' திட்டம் ஐரோப்பிய சமூக நல மாதிரியை ஒத்தது கிடையாது என ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் சீனா மையத்தின் ஜார்ஜ் மேக்னஸ் தெரிவித்துள்ளார்.*

*சீன அரசு ஷி ஜின் பிங்கின் நிர்வாகத்தில் எவ்வாறு செயல்படும் என்பதை முடிவு செய்வதில் இந்த ஹபொதுவான வளம், கொள்கை ஒரு முக்கிய பங்காற்றும் என தெரிகிறது.*

*இந்த பொது வளம் என்னும் திட்டத்தில் சமத்துவமான ஒரு சமூகத்தை உருவாக்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று நிறுவனங்கள் சமூகத்திற்கு பணம் கொடுக்க வேண்டும்.*

*இந்த பொது வள சீனாவில் கட்சியின் கையில் மேலும் அதிகாரம் வந்து சேரும். சீனா வெளிநாட்டு வர்த்தகங்களுக்கு கடினமான ஒரு நாடாகவே இருந்துள்ளது. இப்போது அது மேலும் கடினமாகியுள்ளது. அதாவது உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் நாட்டில் வணிகம் செய்வதை மேலும் கடினமாக்கியுள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



> “கொலைகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் முரட்டோவ் தனது பத்திரிகையின் சுயாதீனக் கொள்கைகளைக் கைவிட மறுத்து வருகிறார் -என்று நோபல் விருதுக் குழு தெரிவித்திருக்கிறது. மரியா ரெஸ்ஸா (Maria Ressa) திமித்ரி முரட்டோவ் (Dmitry Muratov) ஆகிய இருவரும் 1935 இல் ஜேர்மனிய ஊடகவியலாளர் Carl von Ossietzky என்பவருக்குப் பின்னர் நோபல் சமாதானப் பரிசைப் பெறுகின்ற ஊடகத்துறை சார்ந்தோர் என்னும் பெருமையைப் பெறுகின்றனர்.

# கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்க துணிச்சலுடன் போராடிய இருவர்

## சமாதான நோபல் பரிசு பெறும் இரு பத்திரிகையாளர்

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ஊடகவியலாளர்கள் இருவருக்குப் பகிர்ந்து வழங்கப்படுவதாக நோர்வே விருதுக் குழு அறிவித்திருக்கிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டு ஊடகவியலாளர் மரியா ரெஸ்ஸா (Maria Ressa) ரஷ்ய ஊடகவியலாளர் திமித்ரி முரட்டோவ் (Dmitry Muratov) ஆகிய இருவருக்குமே தத்தமது நாடுகளில் கருத்துச் சுதந்திரத்தைக் காப்பாற்ற நடத்திவரும் துணிச்சல் மிக்க போராட்டத்துக்காக இந்த உயர் விருது வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அதேசமயம் உலகெங்கும் இதே நோக்கங்களுக்காக அயராது பாடுபட்டுவருகின்ற அனைத்து ஊடகவியலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியே இவர்கள் இருவருக்கும் விருது வழங்கப்படுவதாகவும் நோபல் விருதுக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

58 வயதான பெண் ஊடகவியலாளர் ரெஸ்ஸா பிலிப்பைன்ஸில் போதை ஒழிப்பு என்ற பெயரில் சொந்த மக்கள் மீது அந்நாட்டின் அதிபர் தொடுத்துள்ள போரை ஒத்த வன்முறைகளை வெளி உலகத்துக்கு அம்பலப்படுத்திய வர்.

2012 ஆம் ஆண்டில் அவர் இணைந்து ஆரம்பித்த “Rappler” என்னும் டிஜிட்டல் ஊடக நிறுவனம் (digital media company) மூலம் புலனாய்வு ஊடகவியலை முன்னெடுத்து வருகிறார்.

பிலிப்பைன்ஸில் அதிபர் ரோட்ரிகோ டுடெர்டேயின் (Rodrigo Duterte) அதிகாரம் நடத்திவருகின்ற சர்ச்சைக்குரிய போதை ஒழிப்புப் போர் நடவடிக்கைகள் மீது கவனத்தைக் கவரும் விதமாக அறிக்கைகளை வெளியிட்டவர். அத்துடன் சமூக ஊடகத் தளங்கள் எவ்வாறு பொய்ச் செய்திகளைப் பரப்புவதற்கும் எதிராளிகளை குறி வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் ஆவணப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கக் குடியுரிமை பெற்றவரான ரெஸ்ஸா முன்னர் சிஎன்என் செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார். 59 வயதான முரட்டோவ் (Muratov) ரஷ்யாவில் கருத்துச் சுதந்திரத்துக்காகப் பல தசாப்தங்களாக அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல் செயற்படுபவர் என்று விருதுக் குழு தெரிவித்துள்ளது.

ஆட்சியாளரை விமர்சிக்கும் “நொவயா கெஸற்றா” (Novaya Gazeta) என்னும் பத்திரிகையை 1993 இல் ஆரம்பித்த அவர், 1995 வரை அதன் பிரதம ஆசிரியராக விளங்கியவர். அச்சுறுத்தல்கள், மரண எச்சரிக்கைகள், கொலைகள் எனப் பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்துவருகின்ற ”nehtah nf]w;wh” ஊடகம் இதுவரை அதன் பணியாளர்கள் ஆறு பேரை இழந்துள்ளது. செச்சினிய யுத்தம் தொடர்பாகக் கட்டுரை வரைந்த அன்னா பொலிட்கோவ்ஸ்கயா(Anna Politkovskaya) என்பவரும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார்.

கொலைகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் முரட்டோவ் தனது பத்திரிகையின் சுயாதீனக் கொள்கைகளைக் கைவிட மறுத்து வருகிறார் -என்று நோபல் விருதுக் குழு தெரிவித்திருக்கிறது.

மரியா ரெஸ்ஸா (Maria Ressa) திமித்ரி முரட்டோவ் (Dmitry Muratov) ஆகிய இருவரும் 1935 இல் ஜேர்மனிய ஊடகவியலாளர் Carl von Ossietzky என்பவருக்குப் பின்னர் நோபல் சமாதானப் பரிசைப் பெறுகின்ற ஊடகத்துறை சார்ந் தோர் என்னும் பெருமையைப் பெறுகின்றனர்.

நோபல் விருதுகள் வழங்கும் விழா எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி- அல்பிரட் நோபலின் நினைவு தினத்தன்று- நடைபெறவுள்ளது. சுவீடன் நாட்டின் கைத்தொழில் துறையாளர் அல்பிரட் நோபல் (Alfred Nobel) 1895 இல் ஆரம்பித்த இந்த விருதுகள் உலகில் மிகவும் மதிப்பு மிகுந்த உயர் கௌரவமாகக் கருதப்படுகின்றன. ■




**மேடம்**
அவசரப் பேச்சினால் பிரச்னை வராமல் கவனமாக இருங்கள். நட்பில் ஏற்பட்ட விரிசல் நீங்கும். செலவு ஒன்று மகிழ்ச்சி தரும். விரோதிகள் காணாமல் போவார்கள். பணம் வரும்.

**இடபம்**
குழந்தைகள் பரிசு வாங்குவார்கள். உழைப்பினால் நன்மை வரும். சுப விரயங்கள் உண்டு. உடன்பிறந்தோரை சந்திப்பீர்கள். திட்டமிட்ட தெய்வ வழிபாடு நன்கு அமையும். கவலை நீங்கும்.

**மிதுனம்**
குழந்தைகள் வெற்றி பெறுவர். தந்தைக்கு நன்மை உண்டு. புதிய வேலை கிடைக்கும். வாகன யோகம் உண்டு. பழைய நிகழ்ச்சி காரணமாக ஏற்பட்ட வருத்தம் நீங்கும்.

**கடகம்**
குழந்தைகளால் வாழ்வில் ஏற்பட்ட சங்கடம் ஒன்று நீங்கும். எந்தப் பிரச்னையும் வந்த வேகத்தில் மறையும். கலகலப்பான நாள். அரசாங்க வேலை கிடைப்பது பற்றிய செய்தி வரும்.

**சிம்மம்**
தந்தைக்கு நன்மை ஒன்று வரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். குழந்தைகள் இடையே நெருக்கம் கூடும். வெளிநாட்டிலிருந்து நன்மை வரும். போட்டிகளில் பங்கேற்று வெற்றி. மகிழ்ச்சி கூடும்.

**கன்னி**
உழைக்கத் தயங்க மாட்டீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். திட்டமிட்டு செயல்களை செய்து நன்மை அடைவீர்கள். திடீர் அதிர்ஷ்டத்தை நம்பி எதுவும் செய்ய வேண்டாம்.

**துலாம்**
அலைச்சல் அதிகரித்தாலும் அதன் பலன் இனிக்கும். உழைப்பாலும் முயற்சியாலும் உங்கள் இலக்கை அடைவீர்கள். பயணம் ஒன்று செய்ய வேண்டி வரும். களைப்பான நாள்.

**விருட்சிகம்**
மனதுக்கு நெருக்கமான ஒருவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பணியில் கவனத்தை பாதிக்கும் செயல்களை தவிர்க்க வேண்டும். நணபர்களால் நன்மை ஒன்று ஏற்படும்.

**தனுசு**
கடுமையான உழைப்பின் காரணமாக ஆதாயம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த உற்சாகத் தகவல் ஒன்று வரலாம். வெளிநாட்டு தொடர்பு நன்மை தரும். உறவினர் உதவுவர்.

**மகரம்**
விலை உயர்ந்த பொருள் ஒன்றை வாங்கும் யோகம் உண்டு. நிதி வளர்ச்சி கூடும். தாயார் பற்றிய கவலைகள் தீரும். பெண்கள் குடும்ப நலனில் அதிக அக்கறை கொள்வர்.

**கும்பம்**
எதிர்பாராத செலவு ஒன்று ஏற்படக்கூடும். அலைச்சல் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு கைமாறிய பொறுப்பு மீண்டும் உங்களிடம் வரலாம். முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்**
வருமானம் அதிகரிக்கும். வழிபாடுகளில் கவனம் கூடும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. சோம்பலை தவிர்த்து செயல்பட வேண்டியிருக்கும். பரபரப்பான நாள்.

### ரிஷாத் பதியுதீன் எம்.பி. தொடர்பில்

# கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பஸில் - சுமந்திரன் வாக்குவாதம்

கொழும்பு, ஒக். 10

**பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பிக்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிந்தது.**

சபாநாயகர் தலைமையில் நடந்த இந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், சிறை வைக்கப்பட்டுள்ள ரிசாத் பதியுதீன் எம்.பி. தொடர்பில் சர்ச்சை எழுந்தது.

அப்போது ரிஷாத் தொடர்பில் சட்டமா அதிபர் அனுப்பிய குறிப்பிபொன்று தொடர்பில் சபாநாயகர் விளக்கியுள்ளார்.

அதன்போது கருத்து வெளியிட்டுள்ள சுமந்திரன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டாலும் அவர் என்ன குற்றம் செய்தார் என்று சொல்லப்படவேண்டுமெனவும் சட்டமா அதிபரின் பதில் திருப்தியானதல்லவென்றும் சுட்டிக்காட்டினார்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, காரணம் கூறியா கடந்த ஆட்சியில் நாங்கள் கைதுசெய்யப்பட்டோம் ? தடுத்து வைக்கப்பட்டோம்? அப்போது நாங்கள் கைது செய்யப்பட்டமைக்கு நீங்களும் ஒரு பிரதான காரணம். அலரி மாளிகையில் கூட்டங்களை நடத்தி அதில்தான் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்று சுமந்திரனை நோக்கி கடுந்தொனியில் கூறியுள்ளார்.

இதனையடுத்து இருவருக்கு மிடையில் கடும் வாதப்பிரதி வாதங்கள் ஏற்பட்டன.

நீங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. நான் எந்தக் கூட்டத்திலும் கலந்துகொண்டதில்லை.யாரை கைது செய்யவும் ஆலோசனை வழங்கியதில்லை. யாரோ கொடுத்த கயிறை விழுங்கிக்கொண்டு நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று சுமந்திரன் எம்.பி. இங்கு பதிலளித்தார் என தெரிவிக்கப்பட்டது.

# கட்சியிலிருந்து என்னை வெளியேற்ற நீங்கள் யார்?

### சஜித் தரப்பிடம் டயனா கமகே கேள்வி

கொழும்பு, ஒக். 10

மழைக்கு ஒதுங்குவதற்காக வீட்டுக்குள் இடமளித்தால் என்னையே வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சிக்கின்றனர் என்று தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்தார்.

வீட்டின் உண்மையான உரித்தைக் கொண்டுள்ள உரிமையாளர் நான் என்பதால் என்னை ஐக்கிய மக்கள் சக்தி இருந்து யாராலும் வெளியேற்றிவிட முடியாது என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து டயனா கமகே நீக்கப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே டயனா கமகே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கட்சி எனது கணவரின் கட்சியே. நானும், கணவரும் இந்தக் கட்சியைக் கொடுத்த காரணத்தினாலேயே எதிர்க்கட்சியில் பலர் இங்கே வந்துள்ளனர்.

மழைக்கு ஒதுங்க வீட்டில் இடம் கொடுத்தால் வீட்டின் திறப்பையே மாற்றி, என்னையே வெளியேற்ற முயற்சிக்கின்றனர். அவ்வாறு என்னை வெளியேற்றி விட முடியாது.

எனது மனசாட்சிக்கு இணங்கவே அரசுக்கு ஆதரவளிக்கும் தீர்மானங்களை எடுத்தேன். இதன்படி தொடர்ந்தும் தீர்மானம் எடுப்பேன். சஜித் போன்று நான் பொம்மையாக இருக்க மாட்டேன்-என்றார்.

# பால்மா வகைகளுக்கான புதிய விலைகள் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 10

பால்மா வகைகளுக்கான புதிய விலை அதிகரிப்பு நேற்று நடைமுறைக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 250 ரூபாவினாலும் 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 100 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை பால்மா இறக்குமதியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதன்படி 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 480 ரூபாவாகவும் ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கெற்றின் விலை ஆயிரத்து 195 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கும்?

கொழும்பு, ஒக். 10

பாண், பணிஸ் உட்பட அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 20 ரூபாவால் அதிகரிக்குமாறு கோதுமை மா இறக்குமதியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது ஒரு கிலோ கோதுமை மா 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. 20 ரூபா விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் ஒரு கிலோ கோதுமை மா 107 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

இந்நிலையிலேயே கோதுமை மா மற்றும் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படும் பட்சத்தில் பாண், பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளது என பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

# மாகாண முதல்வர் பதவிக்காக எம்.பி. பதவியை துறக்கும் மூவர்!

கொழும்பு, ஒக். 10

2022 முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தற்போது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மூவர் இராஜினாமா செய்வார்கள் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் கட்சித் தலைமைகளுக்கு முன்கூட்டியே அவர்கள் அறிவித்துவிட்டனர் எனவும், மாகாண முதல்வர் பதவியை இலக்குவைத்தே அவர்கள் களமிறங்கவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

பதுளை, பொலனறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களை சேர்ந்த உறுப்பினர்கள் மூவரே இவ்வாறு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரும், சவாலை ஏற்றி மாகாண முதல்வர் பதவிக்காக போட்டியிடக்கூடும்.

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி 6 வயது சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 10

பாசிக்குடா சுற்றுலா விடுதியின் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்த ஆறு வயது சிறுமி ஒருவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி-ரம்புக்கன பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் பாசிக்குடாவிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

அங்கு தங்கியிருந்த குடும்பத்தின் பிள்ளைகள் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருக்கும்போது ஆறு வயதுடைய சியாம் செய்னப் எனும் சிறுமி நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார் என பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு நீரில் மூழ்கி மரணமான சிறுமியின் உடல் வாழைச்சேனை ஆதார வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அனைத்து பாடசாலைகளையும் நவம்பரில் ஆரம்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஒக். 10

எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பத்தில் இருந்து அனைத்து தரங்களுக்குமான பாடசாலைகளையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே எழுப்பிய வாய்மொழி மூலமான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாளின் தரத்தை எந்த விதத்திலும் மாற்றி அமைப்பதற்கு ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. அதற்கு பதிலாக மாணவர்களுக்கு பாடத்தை உள்ளடக்கி பரீட்சைக்கு தயாராவதற்கு கூடுதல் நேரம் வழங்கப்படும்.

அத்துடன், பாடசாலை நாட்காட்டியில் வருடத்துக்கு 210 நாட்கள் பாடசாலைகள் நடத்தப்பட்டபோதிலும், 2020 ஆம் ஆண்டில் 65 நாட்கள் மட்டுமே பாடசாலைகளை நடத்த முடிந்தது. 2021 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்திலுள்ள மாணவர்களுக்காக 5 நாட்கள் மாத்திரமே பாடசாலைகள் நடத்தப்பட்டன.

இதேவேளை, தற்போது பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் எந்த அளவுக்கு முடிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மாகாண மட்டத்தில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றார்.

# சிறுவர் மற்றும் மகளிர் அமைச்சின் ஊடாக வவுனியா மாவட்டத்தில் உதவித்திட்டங்கள்

வவுனியா, ஒக். 10

சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு கல்விச்சேவை அமைச்சினூடாக வவுனியா மாவட்டத்தில் பல்வேறு உதவித்திட்டங்கள் நேற்று வழங் கப்பட்டன.

சிறுவர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர்களை கௌரவிக்கும் வகையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், பெண் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான நட மாடும் விற்பனைக்கூடம் மற்றும் நடமாடும் விற்பனை வண்டி என்பனவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் திருமதி குமார புஸ்க கும்பிர, வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பாளர் திருமதி பவதாரணி இராஜசிங்கம், வவுனியா மாவட்ட செயலாளர் சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் திருமதி பி. சபர்ஜா மற்றும் உத்தியோகத்தர்கள் சிறுவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 14.5 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை நாட்டுக்கு தருவிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 10

இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பைசர் கோவிட்-19 தடுப்பூசி மூன்றாவது அலகாக வழங்கப்பட உள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

இதற்காக 14.5 மில்லியன் அலகு பைசர் மருந்துகளைக் கொள்வனவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அரச மருந்துக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக அதற்கான கொள்வனவுக் கட்டளை வழங்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

# வடக்கில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

## மக்கள் பிரதிநிதிகளை ஒத்துழைக்குமாறு மாகாண கல்வி அமைச்சு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 10

**வடக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக ஆரம்ப பாடசாலைகளை மீள ஆரம்பிப்ப தற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், மக் கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு மாகாண கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.**

200 மாணவர்களுக்கு உட் பட்ட ஆரம்ப பாடசாலை களை, எதிர்வரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி வியாழக்கிழமை மீள ஆரம்பிப்பதற்கு அனைத்து மாகாண ஆளுநர்களும் கூட் டாகத் தீர்மானித்தனர்.

எனவே, அதற்கான நட வடிக்கைகளை முன்னெடுத்து மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதற்கான விழிப் பூட்டல்களை அந்தந்த மாவட் டத்தைப் பிரதிநிதித்துவப்படுத் தும் பாராளுமன்ற உறுப்பினர் கள் மற்றும் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள் ளூராட்சிச் சபை உறுப்பினர்க ளின் ஒத்துழைப்பைக் கோரு வது எனவும் ஆளுநர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில், வடக்கு மாகாணத்தில் 200 மாணவர் களுக்கு உட்பட்ட 680 ஆரம் பப் பாடசாலைகள் ஒக்ரோபர் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வுள்ளது.

இதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூ ராட்சிச் சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கேட் டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக, 6 மாதங்க ளாகப் பாடசாலை கல்வி நட வடிக்கைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தடுப்பூசி மட்டும் போதும்

## அசேல குணவர்த்தன கூறுகிறார்



கொழும்பு, ஒக். 10

பாடசாலை மாணவர்க ளுக்கு ஒரு தடுப்பூசியை மாத்தி ரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் நோயெதிர்ப்பு சக்திக்கு ஒரு தடுப்பூசி மாத்திரம் போதுமா னது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 18 மற்றும் 19 வயதுடைய பாடசாலை மாண வர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற கொவிட் ஒழிப்பிற்கான விசேட செயலணிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 32.69 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் குறிப்பிட்டார்.

# 2021 இன் 2ஆவது காலாண்டில் 12.3 வீத பொருளாதார வளர்ச்சி

கொழும்பு, ஒக். 10

ஆண்டின் இரண்டாவது காலாண்டில் அரசாங்கம் 12.3 சதவீத பொருளாதார வளர்ச் சியை எட்டியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பாராளு மன்றத்தில் உரையாற்றியபோது அவர் இதனை தெரிவித்தார்.

சீனா உள்ளிட்ட முக்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், இலங்கை திருப்திகரமான அள வில் உள்ளது. கடந்த வருடத் துடன் ஒப்பிடுகையில் இலங் கையின் ஏற்றுமதி 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

கொரோனாவுக்கு எதிராக 60 சதவிகித மக்கள் முழுமை யாக தடுப்பூசி போடப்பட்ட தால் வெற்றிகரமான தடுப்பூசி இயக்கத்தை அரசாங்கம் மேற் கொள்ள முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை கையாளும்போது உலகளாவிய தொற்றுநோய்க்கு மத்தியில் இலங்கையர்களின் உயிர்க ளைப் பாதுகாக்க முடிந்தது. கொரோனா தொற்றுநோயைக் கையாண்டதற்காக நாடு சர்வ தேச சமூகத்தால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# பிரதமருடன் பேச்சு நடத்த தயாராகும் ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஒக். 10

சம்பளப் பிரச்னையை முன் வைத்து ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத் துள்ள போராட்டம் நேற்று முன் தினம் 90 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்நிலையில், நாளை திங் கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வுடன் பேச்சு ஒன்றை நடத்து வதற்கு, தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள தாக இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

குறித்த பேச்சில் தங்களது பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மத்தியஸ்தர் சபை அமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ். பிரதேச மத்தியஸ்தர் சபை ஜே/246 இன் அமர்வு கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முதல் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை யும் காலை 9 மணி முதல் பிற் பகல் 1 மணிவரை சுகாதார விதி களுக்கு அமைவாக யாழ். சன் மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது என தவிசா ளர் திருமதி கௌரி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

# மருத்துவர்களின் ஓய்வு வயது 63!

## வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஒக். 10

பதிவு செய்யப்பட்ட மருத் துவர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நிர்ணயித்து, அதி விசேட வர்த்தமானி அறி வித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி அமைச்சர் ஜனக பண் டார தென்னக்கோன் கையொப்பமிட்டு இந்த வர்த்த மானி வெளியிடப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 2, 2021 முதல் நடை முறைக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

# பாடசாலைகளை மீண்டும் திறக்க ஆசிரியர்களின் ஆதரவு அவசியம்

## அமைச்சர் மஹிந்தானந்த கூறுகிறார்



கொழும்பு, ஒக். 10

பாடசாலை நடவடிக்கை களை மீண்டும் தொடங்குவ தற்கு அதிபர்களும் ஆசிரியர் களும் ஆதரவை வழங்கவேண் டும் என அமைச்சர் மஹிந்தா னந்த அழுத்கமகே கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என் பதில் தானும் உறுதியாக இருப்பதாக குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று காரணமாக மாணவர்கள் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு களாக கல்வியை இழந்துள்ள தாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே அவர்களுக்காக மீண்டும் கல்வி நடவடிக் கையை தொடங்கும் அரசாங் கத்தின் முயற்சிக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆதரவை வழங்கவேண்டும் என கேட் டுக்கொண்டார்.

# கொரோனா தொற்றினால் 67 குழந்தைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 10

கொரோனா தொற்று கார ணமாக 67 குழந்தைகள் உயிரி ழந்துள்ளதாக குடும்ப சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

சமூக மருத்துவ நிபுணர் மருத்துவர் கபில ஜயரத்ன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அவர்களில் 13 பேர் வீட்டி லேயே உயிரிழந்துள்ளனர்.

கொரோனா அறிகுறிகளைக் கண்டறிந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்படுவதில் ஏற் பட்ட தாமதத்தால் குழந்தை களில் 95 சதவிகித உயிரிழப்புக் கள் நிகழ்ந்தன.

கொவிட் நிமோனியாவே பெரும்பாலானோரின் உயிரி ழப்புக்கு காரணமாகும்.

சுகாதார அமைப்பு மீதான எதிர்மறை உணர்வுகள் காரண மாக, குழந்தைகளுக்கு தொற்று உறுதியான பின்னரும் வைத்



தியசாலைகளில் அனுமதிக்கப் படவில்லை. சிலர் வைத்திய சாலை பராமரிப்புக்கு பயப்படு கின்றனர். தொழில்முறை ஆரோக்கியத்தை நாடுவதைத் தவிர்க்கின்றனர்.

கோவிட் -19 தொற்றுடன் அனுமதிக்கப்பட்ட ஏராளமான குழந்தைகள் வைத்தியசாலை களில் சிறந்த கவனிப்பைப் பெற்று முழுமையாக குணம டைந்தனர்.

நோயாளிகளுக்கு சிறந்த பராமரிப்பு வழங்க சிறப்பு மருத் துவர்கள் தங்களை அர்ப்பணித் துள்ளனர். எனவே நாட்டின் சுகாதார அமைப்பில் பொது மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் - என்றார். (அ)

# படகு மூலம் கனடா சென்ற 64 தமிழர் அமெரிக்கப் படைகளிடம் சிக்கினர்?

கொழும்பு, ஒக். 10

இந்தியாவில் உள்ள இலங் கைத் தமிழர் அகதிகள் முகாம் களில் இருந்து 64 பேர் படகு மூலமாக, கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்று மாலைதீவு அருகே அமெரிக்க கடற்படை யினரிடம் சிக்கியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் தென் மாவட் டங்களில் உள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களில் வசிக்கும் 64 பேர் கடந்த செப் ரெம்பர் முதல் வாரத்தில் கேர ளத்தில் ரூபா 45 இலட்சம் மதிப் பில் இந்தியப் பதிவு பெற்ற படகை விலைக்கு வாங்கி கன டாவுக்கு பயணித்ததனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இவர்கள் சென்ற படகு மோசமான வானிலை காரண மாக, மாலைதீவு மற்றும் மொரீஷியஸ் நாடுகளுக்கு இடையிலான கடற்பரப்பில் பயணிக்க முடியாத நிலைமைக் குள்ளானது.

மாலைதீவு அருகே உள்ள டிக்கோ கார்சியா என்ற தீவு அமெரிக்காவின் வசம் உள்ளது. இந்தத் தீவில் அத்துமீறி இவர்களின் படகு நுழைந்த தனர் எனக் கூறி அமெரிக்கப் படைகளால் கைது செய்யப் பட்டதாக தகவல் வெளியாகி யுள்ளது.

இதுவரை இந்தியத் துதரகத் துக்கு இது குறித்து எந்தவித மான தகவலும் உறுதியாக தெரிவிக்கப்படவில்லை.


தமிழகத்தில் உள்ள முகாம் களில் இருந்து 64 அகதிகள் சட்டவிரோதமாக வெளிநாட் டுக்கு தப்ப முயன்றதாக வந்த தகவலையடுத்து கியூ பிரிவு பொலிஸார் தென் மாவட்டங் களில் உள்ள அகதிகள் முகாம் களில் கடந்த 3 நாள்களுக்கும் மேலாக தீவிர சோதனை நடத்தி உள்ளனர். ஆனால், தற்போது வரை இந்த 64 பேர் யார் என்பதை உளவுத்துறை பொலிஸாரால் உறுதி செய்ய முடியவில்லை.

அதேநேரத்தில் கடற்பரப் பில் சிக்கிக் கொண்டதாகக் கூறப்படும் 64 நபர்களின் விவ ரங்களைப் பெறுவதற்காக தமி ழக பொலிஸ் சர்வதேச பொலிஸார் உதவியை நாடி இருக்கிறது.




# சீனாவிடம் இலங்கையை இந்தியா எப்படி இழந்தது?

## இந்திரா ஆட்சிக்கால தவறுகளின் தொடக்கம்



- பகவான் சிங் -
தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

**யாழ்ப்பாண தீபகற்பத்தைச் சேர்ந்த பாக் ஜலசந்தி தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி திட்டங்களை நிறுவ ஒரு சீன நிறுவனம் ஒப்பந்தத்தை வாங்கியிருக்கிறது. இதில் நெடுந்தீவு, இராமேஸ்வரத்தி லிருந்து வெறும் 20 கடல் மைல் அதாவது, 30 கிலொமீட்டர் தொலைவில் இருக்கிறது.**

பிரபலமான நியூஸ் 18.கொம் தளத்தில் இந்த ஆண்டு ஜுலை மாதம் வெளிவந்த என்னுடைய கட்டுரை இது. இந்தக் கட்டுரையின் மேம்படுத்தப்பட்டு திருத்தப்பட்ட தமிழ் வடிவத்தை 'ஈழநாடு' வாசகர்களுக்காக இங்கே தருகிறேன். இந்தியா மற்றும் இலங்கை சம்பந்தப்பட்ட சில முக்கிய சர்வதேச நிகழ்வுகளை அடுத்த சில ஞாயிற்றுக் கிழமைகளில் நாம் அலசப் போகிறோம். ஆறு மாதத்திற்கு முன்பு பிரசுரமான எனது இந்தக் கட்டுரை உட்பட பல எச்சரிக்கைகள், சீன தரப்பிலிருந்து நடந்த சில நிகழ்வுகள் எல்லாமாகக் சேர்ந்து, சீனாவின் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கை உட்பட சில அண்டை நாடுகளின் உதவியை நாடி, இந்தியா சில அடிகளை எடுத்து வைத்திருக்கிறது. கொழும்புடன் இந்தியாவின் நட்புறவை மேம்படுத்தவும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் உள்ள தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டவும் சமீபத்தில் வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஸ்ரிங்க்லா சமீபத்தில் இலங்கை வந்திருந்தார். அவரது வருகை நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்துமா, அல்லது தாமதமாக வந்த சிறு முயற்சியாக மட்டுமே அது முடிந்துவிடுமா என்பது போகப்போகத்தான் தெரியும்.

இதோ, எனது நியூஸ்18.கொம் கட்டுரை....

இமாலயப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள இராணுவப் பிரச்னைகளால் உருவாகியிருக்கும் பதற்றத்துக்கு நடுவே, தமிழ்நாட்டை ஒட்டிய பாக் ஜலசந்திக்குள்ளும் சீனா புகுந்துவிட்ட நிலையிலும், டெல்லியின் 'சவுத் ப்ளொக்'கைச் சேர்ந்த அறிவுஜீவிகள் இன்னும் தூக்கத்திலிருந்து விழிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். தனது சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தும் குறிக்கோளோடு சிறு நாடுகளை விழுங்கிவரும் சீன டிராகன், ஓர் இருளடைந்த அமாவாசை இரவில் இந்தியாவின் தெற்குக் கடற்பகுதிக்கு அருகே இரகசியமாக ஊர்ந்து வரவில்லை. மாறாக, ஊடகங்களின் உரத்த எச்சரிக்கைகளுக்கு மத்தியில் அறிவுஜீவிகள் உறங்கிக்கொண்டிருந்திருக்கிறார்கள். கடன் பிரச்னை மூலம் இலங்கையை சீனா பிணைத்து வைத்திருப்பதும், ஊடுருவல் நிகழ்வால் இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் இந்தியப் பெருங்கடலைச் சுற்றிய எல்லா நாடுகளின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதும் ஓர் எச்சரிக்கை ஓலமாக உலகெமெங்கும் கேட்கிறது.

மே 2009இல் இலங்கை உள்நாட்டுப் போர் முடிந்ததிலிருந்தே பல்வேறு திட்டங்களில் பணிபுரியும் சீன நிபுணர்களும் பணியாளர்களும் ஏற்கனவே குவியத் தொடங்கி விட்டனர். கொழும்பில் உள்ள அவரது வீட்டில் 2011இல் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது அவர் கூறிய வார்த்தைகள் எனக்கு இன்னமும் நினைவிருக்கின்றன. சீனா மீதான அவரது காதல் பற்றிய இந்தியாவின் ஆதங்கம் குறித்து கேட்டபோது, அவர் உடனடியாக பதிலடி கொடுத்தார். "இப்போது நான் சீனாவுக்குக் கொடுத்திருக்கும் எல்லா திட்டங்களையும் முதலில் இந்தியாவிடமே கொடுக்க முன்வந்தேன், ஆனால், நீங்கள் அவற்றை ஏற்கவில்லை. நான் என்ன செய்வது? என் நாட்டை நான் முன்னேற்றவேண்டாமா?".

அன்று மாலை தேநீர் அருந்துவதற்காக அழைப்பு விடுத்து என்னுடன் உரையாடிய இந்திய தூதரகத்தின் மூத்த உறுப்பினர் ஒருவரிடம் இதைக் கூறினேன். அவரது பதில் உடனே வந்து விழுந்தது. "ம்... அவர் எல்லாம் இலவசமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார், நாங்கள் எப்படி அதை ஏற்க முடியும்?" என்றார். எதிர்கால இந்தியாவின் நன்மையைக் கருத்தில்கொண்டால் அது ஒரு நல்ல முதலீடாகவே இருக்கும் என்று நான் நினைவுபடுத்தினேன். ஆனால், திட்டங்களுக்கான பேச்சுவார்த்தையின்போது 'கணக்கில் வராத' சில தாராளமான பணமுதலீடுகளை இலங்கைக்கு சீனா தந்திருப்பது குறித்து அவர் இவ்வாறு கூறியிருக்கக்கூடும்.

அந்த பேட்டிக்காக நான் இலங்கை சென்று இறங்கியபோது, ஓர் இளம் சீன பெண் அமைச்சர், 'மஹிந்த ராஜபக்ஷ தாமரை அரங்கத்தில்' ஆண்களும் பெண்களுமாக கிட்டத்தட்ட 100 பாலே நடனக் கலைஞர்களை வைத்து திறப்புவிழா நடத்தினார். அப்போதைய அதிபர் ராஜபக்ஷவிற்காக கொழும்பில் அந்த சிறப்புமிக்க அரங்கத்தை சீனா கட்டியிருந்தது.



### அரசியல் சறுக்கல்கள்

அப்போதிலிருந்து இலங்கையில் பல திட்டங்களை சீனா கைப்பற்றியிருக்கிறது. கொழும்பில் ஒரு முக்கியமான துறைமுகத்தைக் கட்டும் திட்ட ஒப்பந்தத்தை இந்தியா - ஜப்பான் கூட்டணியிடமிருந்து சீனா வென்றது. இலங்கை என்கிற இந்த சிறு தீவில், சீனா கிட்டத்தட்ட 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்திருக்கிறது, இலங்கையின் ஜி.டி.பியில் இது 14 விழுக்காடு ஆகும் (2019 அறிக்கை). இந்திய முதலீடுகளோடு ஒப்பிடும்போது இது ஏழு மடங்கு அதிகம் என்பது அச்சம் தரக் கூடியதாக இருக்கிறது. இலங்கை இப்போது சீனாவிற்குக் கடன்பட்டதாக இக்கட்டில் மாட்டிக்கொண்டிருக்கிறது. இலங்கைத் தீவு மட்டுமல்லாமல், பிராந்தியத்திலும் வருகிற இந்த சீன ஆதிக்கம் இந்தியாவைப் பல வழிகளில் பாதிக்கும்.

**சீனாவின் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கை உட்பட சில அண்டை நாடுகளின் உதவியை நாடி, இந்தியா சில அடிகளை எடுத்து வைக்கிறது.**

இந்த ஆண்டின் தொடக்கத்தில், யாழ்ப்பாண தீபகற்பத்தைச் சேர்ந்த பாக் ஜலசந்தி தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி திட்டங்களை நிறுவ ஒரு சீன நிறுவனம் ஒப்பந்தத்தை வாங்கியிருக்கிறது. "இதில் நெடுந்தீவு, இராமேஸ்வரத்திலிருந்து வெறும் 20 கடல் மைல் அதாவது, 30 கிலொமீட்டர் தொலைவில் இருக்கிறது. மீன்பிடிப் படகில் போனால் 40 நிமிடங்களில் நெடுந்தீவை அடைந்துவிடலாம். அது கவலையளிக்கிறது" என்கிறார் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எஸ். பி. லோகநாதன். 1983இல் வட இலங்கையின் போர்ச்சூழலில் இருந்து தப்பித்து, முதன்முதலின் இலங்கை அகதிகள் இங்கு வந்து இறங்கியதிலிருந்து அவர் எனக்கு இலங்கை பற்றிய செய்திகளை சேகரிப்பதில் உதவி செய்து வருகிறார்.

சிவபெருமானை வணங்கி இலங்கையில் சிறைவைக்கப்பட்ட தன் மனைவி சீதையை மீட்க, பிராமணனான இராவணனைக் கொன்ற பாவத்தை இராமபிரான் போக்கிக்கொண்ட இடம் இராமேஸ்வரத்தில் உள்ள இராமநாதசுவாமி கோயில் என்று தலபுராணம் கூறுகிறது. இந்த கோவில் நகரத்திலிருந்து இப்போது வரும் செய்திகளில் முக்கியமானவை, இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கையினரால் கடலில் தாக்கப்படுவது. இந்த சர்ச்சையைத் தவிர, 1974இல் இலங்கை அதிபர் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் இந்திரா காந்தி பரிசளித்த கட்சத்தீவை மீட்குமாறும் டெல்லியை நோக்கி தமிழகத்தின் அரசியவாதிகளும் சமூக செயற்பாட்டாளர்களும் குரல் எழுப்புகிறார்கள்.

தென் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் ஜமீன் பகுதியைச் சேர்ந்தது கச்சத்தீவு. இந்தியாவின் எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியை பாராளுமன்றத்தில் மூன்றுக்கு இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதல் இல்லாமல் வேறொரு நாட்டுக்குத் தருவது அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் கச்சத்தீவை விட்டுத்தரும்போது இந்திரா காந்தி பாராளுமன்றத்தின் ஒப்புதலை நாடவில்லை. இப்போது கச்சத்தீவு இலங்கையின் சொத்தாகிவிட்டது. இன்னும் சொல்லப்போனால், இந்தியப் பெருங்கடலின் ஒரு முக்கியமான புள்ளியாக சீனா கச்சத்தீவைப் பார்க்கிறது. "என் வீட்டிலிருந்து கச்சத்தீவுக்கு 12 கடல் மைல்தான். படகில் போனால் 30 நிமிடங்கள்" என்று எச்சரிக்கிறார் லோகநாதன்.

இந்த பத்திரிகையாளரும் அவரது மீனவ நண்பர்களும் மட்டுமல்ல, சென்னையிலும் டெல்லியிலும் உள்ள நிபுணர்கள்கூட சீனாவின் இந்த ஊடுருவலைக் கவலையோடு கவனிக்கிறார்கள். "தீவுகளில் பொருத்தப்படும் காற்றாலைகள் வெறும் கண்துடைப்புதான். ஆழமான சில திட்டங்கள் இயங்குகின்றன. இந்தியாதான் இங்கு முக்கிய இலக்காக இருக்கிறது. தெற்கில் ஒரு புதிய போர் அரங்கம் உருவாகப் போகிறது" என்று கவலையுடன் தெரிவிக்கிறார், நீண்ட நாட்களாக இலங்கை விவகாரங்களை கவனித்து வருபவரும் அரசு அதிகாரியுமான ஒரு நண்பர்.

பெயர் வெளியிட விரும்பாத அந்த நண்பர், "இந்தியா பல ஆண்டுகளாகவே இந்த விஷயத்தில் சொதப்பி வருகிறது" என்பதை ஏற்றுக்கொள்கிறார். "இப்போது காலம் கடந்திருக்கக்கூடும். கண்ணுக்குத் தெரிகிற மற்றும் தெரியாத தாக்கங்களை 'க்வாட்' நான்முனை அமைப்பு உருவாக்க வேண்டும், அது போன்ற அவசர முடிவுகளை செயல்படுத்தினால் சமாளிக்கலாம்" என்கிறார். இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நான்கு இந்தியப் பெருங்கடல் நாடுகளின் கூட்டமைப்பான 'க்வாட்', இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆதிக்கத்தை நிலைநாட்ட சில கூட்டு கப்பற்படை முயற்சிகளை எடுத்துவருகிறது. பீஜிங்கிலிருந்து வரும் பெரும் நிதி உதவிகளிலிருந்து சிறு நாடுகளை மீட்கவும் க்வாட் நிதி ஒதுக்குகிறது. இந்த சிறு நாடுகளின்மீது நெருப்புப் பெருமூச்சு விட்டு, சீன டிராகன் க்வாடை விரட்டி அடிக்க முயற்சி செய்கிறது.

சமீபத்தில் வாஷிங்டனில் நடந்த க்வாட் பேச்சு வார்த்தைகள், இந்தியப் பெருங்கடல் மற்றும் தெற்கு சீனக்கடலில் மட்டுமல்லாமல், தெற்கு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பாவிலும் பொருளாதார, அரசியல் ரீதியாகப் பரவ நினைக்கும் சீனாவைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தின. இதுபற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். அடுத்த வாரம் தொடர்வேன்.

(மிகுதி நாளை தொடரும்)

# இலங்கையையும் தாக்கும் பண்டோரா ஆவண கசிவு!



**“இந்த விவகாரம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்து ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி, உத்தரவிட்டுள்ளார். இதன்படி நிருபமா ராஜபக்ஷவின் கணவரான திருக்குமரன் நடேசன், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் வாக்குமூலம் வழங்கியிருக்கின்றார். இது குறித்த விசாரணை முடிவுகளுக்காக நாம் ஒரு மாதம் பொறுத்திருக்க வேண்டும்.**

**நஜீப் பின் கபூர்**

**300-**க்கும் மேற்பட்ட தலைவர்கள் வரி ஏய்ப்புக்கு உதவும் வெளிநாட்டு ரகசிய நிறுவனங்களில் முதலீடு செய் திருப்பது “பண்டோரா பேப்பர்ஸ்“ எனப்படும் மிகப்பெரிய ஆவணக் கசிவின் மூலம் தெரியவந்திருக்கிறது. பொதுவெளியில் பெரிதும் மதிக்கப் படும் உலக தலைவர்கள், மன்னர்கள், அரசியல்வாதிகள், கோடீஸ்வரர்கள் என பலரும் ரகசியமாகவும் குறுக்கு வழிகளிலும் பணத்தையும் சொத்து களையும் குவித்திருப்பது அம்பலமாகி இருக்கிறது.

2017இல் பனாமா பேப்பர்ஸில் இந்தியாவின் பிரபல்யமான அமிதாப் பச்சான், ஐஸ் வர்யா ராய் ஆகியோரது பெயர்களும் அந்தப் பட்டியலில் இலங்கையர் ஒருவரும் இருந்தார். அவர் நிசங்க சேனாதிபதி. இப் போது இந்தத் தகவல்களை உலகிற்கு அறியத் தருவது யார் என்று பார்ப்போம்.

சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர்களின் கூட்டமைப்பு இதனை வெளியிட்டு வருகின்றது. அதற்காக இவர்கள் இந்த முறை 6.4 மில்லியன் கடதாசிகளை செவ்வனே பரிசோதனைக்கு உட்படுத்தி இருக்கின்றார்கள். இதற்காக 600 வரையிலான ஊடகவியலாளர்கள் பணிக்கு அமர்த்தப் பட்டிருக்கின் றாார்கள். எனவே இது ஒரு கற்பனைக் கதையோ அரசியல் பழிவாங்கலோ அல்ல என்பது அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம்.

இப்போது இவர்கள் வெளியிட்ட ஆவணத்தில் தொன்நூற்றியொரு நாடுகளின் மோசடிக்காரரர்கள் இருக்கின் றார்கள். இதில் முப்பது சமகால முன் னாள் அரசியல் தலைவர்களும், அமைச்சர்கள் அரசியல்வாதிகளின் உறவினர்கள் என்று பல்வேறு துறை களில் பிரபல்யங்கள் 330 பேர் இந்தப் பட்டியலில் இடம் பிடித்திருக்கின்றார் கள். இந்த முறை பண்ணிரெண்டு மில்லி யன் வரையிலான ஆவணங்களை இவர் கள் அம்பலப்படுத்தி இருக்கின்றார்கள். இந்தியாவில் முன்னாள் கிரிக்கட் வீரர் சச்சின் தென்தூக்காரின் பெயரும் இடம் பெற்றிருக்கின்றது. அவரது சட்ட ஆலோ சகர்கள் இது சட்ட ரீதியான கணக்கு என்று ஊடக சந்திப்பில் கூறி இருக்கின் றார்கள். இந்தியா இது தொடர்பான விசாரணைகளை முடக்கி விட்டிருக் கின்றது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் நிதிக்குழு ஆலோசகர் ஒருவரின் மகன் பெயர் இதில் இடம் பெற்றிருப்பதாகத் தகவல் கிடைத்ததும் இது தொடர்பான நடுநிலை விசாரணைக்கு கான் உத்தவு பிறப்பித்திருக்கின்றார். உலகில் பல நாடுகளில் தமது பிரசைகளுக்கு விசார ணைகளை ஆரம்பித்திருக்கின்றன. நமது நாட்டிலும் அதிகாரத்தில் இருக்கின்ற ராஜபக்ஷக்க ளின் மிக நெருக்கமான மகள் முறை உறவுக்கார ரான நிருபமா நடேசன் ராஜபக்ஷவின் பெயர் இதில் இடம் பெற்றிருப்ப துடன் அதன் பணப் பெரு மதியையும் பத்திரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் செலவுகளுக்காக சீனாவிடம் இருந்து பல கோடிப் பணத்தை வங்கி னார் என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்ட போது அதனை பிரதமர் மறுத்ததுடன் உடனடியாக அந்தப் பத்தி ரிகைக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாத் தெரிவித்தார். இன்று வரை அவர் அப்படி எந்த ஒரு நடவடிக்கையிலும் இறங்க வில்லை.

ரவி கருணாரட்ண வர்த்தக அமைச்ச ராக இருந்த காலத்தில் நடந்த சதோச ஊழலுக்கு இது வரை தண்டனைகள் வழங்கப்பட்டதா? பிரான்ஸ் ஏயர் பஸ் கொள்வனவில் நடந்த மோசடி. தற் போதய நிதி அமைச்சர் பஸில் 28 ஏக்கர் நிலத்தில் அமைத்திருக்கின்ற மல்வானை பங்களா குறித்த விசாரணைக்கு பின்னர் என்ன நடந்தது? இதன் காணிப் பத்திரம் கூட நடேசன் பெயரில்தான் இருந்தது எனவும் சொல்லப்பட்டது.

அப்பாவி தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் உரிமைகள் என்று பேசப் போகின்ற இடத்தில் மட்டும் பௌத்த பேரினவாதம் பீரிட்டுக் கொண்டு வருவதை நாம் பார்க்கின்றோம். சீனி கொள்ளை, நச்சு தேங்காய் எண்ணையை மக்களுக்கு உணவுக்குக் கொடுத்த முஸ்லிம் வியாபாரிகளுக்கு இது வரை எந்தத் தண்டணைகளும் இல்லை என்ற நிலை இந்த நாட்டில் இருந்து வருகின்றது.

நிருபமா நடேசன் பண்டோரா பேப்பர்ஸ் விடயமாக நாம் பார்ப்போமாக இருந்தால் இன்று நாட்டில் பேசுபொருளாக இருந்தாலும் இன்னும் இரண்டொரு வாரங்களில் இதனை நமது மக்கள் மறந்து விடுவார்கள். இது தான் நமது வரலாறு. இதனை விட எத்தனையோ விவகாரங்களில் நமது நாட்டு நடப்புகள் அப்படித்தான் அமைந்திருந்தன.

2017 ஒரு முறை ஜேவிபி தலைவர் அணுரகுமார பகிரங்க அரசியல் அரங்கு ஒன்றில் பேசும் போது பஸிலின் பணம் திருகுமார் நடேசன், நிருபமா கணக்கு களில்தான் வைப்புச் செய்யப்பட்டு வரு கின்றது. இதனைச் சொல்வதற்காக முடி யுமானால் தனக்கு வழக்குத் தாக்கல் செய்யு மாறும் பகிரங்கமாக சவால் விட்டிருந்தார்.

நிருபமா நடசேன் ராஜபக்ஷ ராஜபக்ஷக் களின் குடும்ப உறுப்பினர். முன்பு உதவி நீர்ப்பாசன அமைச்சராக பதவியில் இருந்திருக்கின்றார். (வயது 59) அப்படிப் பட்ட ஒரு வர் கணக்கிலே இந்தளவு பெரிய பணம் என்றால் அது எவ்வாறு வந்தது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகவே உள்ளது.



தமது பெயர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற் றிருப்பாதல் தமக்கு மிகுந்த மன உழைச்சல் என்று கூறி இதற்கான ஒரு விசார ணையை நடத்துமாறு நடே சனும் மனைவி நிருபமாவும் ஜனாதி பதிக்குக் கடிதம் எழுதி இருப்ப துடன் அந்த விசாரணைகள் எப்படி நடக்க வேண்டும் என்று அவர்களே ஜனாதி பதிக்கு ஆலோசனையும் சொல்லி இருக்கின் றார்கள். ஜனாதிபதி தனது கட்டுப் பாட்டில் இருக்கும் ஊழல் மோச டிகள் பற்றிய ஆணைக் குழுவுக்கு விசாரிக்கும் படி இப்போது கேட்டிருக்கின்றார்.

“நானும் எனது மனைவியும் அப்பா விகள் எந்த தவறையும் செய்யவில்லை என நான் உங்களிற்கு உறுதியளிக்கின் றேன். இவ்வாறான சூழ்நிலையில் இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்வ தற்கு சுயாதீன விசாரணையாளரை தாமதமின்றி நியமிக்குமாறும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்,இதன் மூலம் எங்களின் பெயர்களை குற்றச்சாட் டுகளில் இருந்து விடுவிக்க முடியும். நானும் எனது மனைவியும் கடும் மன வேதனையை எதிர்கொண்டுள்ளதால் நான் உங்களிடம் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்” என திருக்குமார் நடே சனின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து விசார ணைகளை முன்னெடுத்து ஒரு மாதத்துக் குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனா திபதி, உத்தரவிட்டுள்ளார். இதன்படி நிருபமா ராஜபக்ஷவின் கணவரான திருக்குமரன் நடேசன், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் வாக்குமூலம் வழங்கியிருக் கின்றார். இது குறித்த விசாரணை முடிவு களுக்காக நாம் ஒரு மாதம் பொறுத் திருக்க வேண்டும். ■

# தமிழ் தலைமைகளின் ஐக்கியத்தை வலியுறுத்தும் இந்தியாவின் அரசியல் நோக்கம்?

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**



இலங்கை - இந்திய அரசியல் பரப்பில் இரு நாட்டுக்குமான உறவை சரிசெய்யும் நகர்வுகள் நிகழ்ந்து வருகின்றன. இலங்கைக்கான இந்திய தூதுவர் மிலிந்த மொறகொட நியமிக்கப்பட்டதிலிருந்த இரு நாடுகளும் உறவுகளை சரிசெய்வதில் நெருக்கமடைந்து வருகின்றன. அதன் ஒரு கட்டமாகவே இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலம்பகேயின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவரின் வருகை தமிழ் அரசியல் பரப்பில் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தபோதும் தமிழ் அரசியல் தலைமைகளிடையேயான ஐக்கியத்தை வலியுறுத்தும் செய்தியை அவர்கள் விட்டுச்சென்றுள்ளனர். 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு வேண்டும் என்ற ஒரு விடயத்திலாவது தமிழ்த் தரப்புகள் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். இக்கட்டுரை இந்தியா ஐக்கியத்தை வலியுறுத்துவதற்கான அவசியத்தை உரையாடுவதாக உள்ளது.





இந்திய வெளிவிவகார செயலாளர் 13ஆம் சட்ட திருத்த மூலத்துக்கு அப்பால் உரையாடுவதை தவிர்த்திருந்தார். 1987ஆம் ஆண்டு செய்யப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை யின் அடிப்படையில் தமிழர்களுடைய அரசியல் பிரச்னைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட 13ஆவது திருத்த சட்ட மூலத்தை 34 வருடங்களுக்கு பின்னரும் அதனையே இந்தியா வலியுறுத்துவதை அவதானிக்க முடிகிறது. இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாண சந்திப்பிலும், கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பிலும், இலங்கை ஜனாதிபதியுடனான உரையாடலின் போதும் 13ஆம் திருத்த சட்ட மூலத்தின் முழுமை யான அமுலாக்கம் பற்றிய உரையாடல்களையே வெளிப்படுத்தி உள்ளார். 1987ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கை தமிழர் கள் அரசியல் விடயத்தில் இந்திய தரப்பின் தீர்மானங்கள் 13ஆம் திருத்த சட்டமூலம் பற்றியதாகவே உள் ளது. எனவே, இந்தியா இதனை கடந்து இலங்கை தமிழர்களின் நெருக்கடிக்கு தீர்வை முன்வைக்குமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. அதனைக் கடந்து இந்தியா செயல்படுவதற்குரிய வாய்ப்புக்கள் இல்லை என்றும் அத்தகைய 13 பெயரளவிலானதாக மட்டுமே உள்ளது என்றும் அதிகாரமற்ற ஒரு சபையாகவே மாகாண சபை காணப்படுகின்றது எனவும் வாதங்கள் முன்வைக்கப்பட்டாலும் அதனை மீளமைத்து முழுமைப்படுத்தி நடைமுறைப்படுத்துவதே இந்தியாவின் தற்போதைய நோக்கு என்றும் கருத முடியும். இந்த சந்தர்ப்பத்தில்தான் இந்திய வெளிவிவகார செயலாளர் தீர்வு என்ற விடயத்திலாவது தமிழ் தரப்பின் ஐக்கியத்தை வலியுறுத்தி சென்றுள்ளார். அதிலும், 13ஐ அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் அனைத்துத் தீர்வுகளுக்கும் ஐக்கியப்பட்டு கோரிக்கை வைக்குமாறு வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, தீர்வு விடயத்திலாவது தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைய வேண்டுமென்பது இந்தியாவின் வெளிப்பாடாகும். இதே கருத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் இலங்கைக்கான இந்திய தூதுவரும் பல சந்தர்ப்பங்களில் இலங்கை தமிழ் தரப்புக்கு வலியுறுத்தியுள்ளார். ஆனால், அத்தகைய ஐக்கியத்தை வலியுறுத்தும் இந்திய தரப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனித்தும் ஏனைய கட்சிகளை பொது அமைப்புக்களோடு இணைத்தும் சந்திக்க கரிசனை கொண்டதன் நோக்கம் மட்டுமே நெருடலாக உள்ளது.

இந்திய வெளிவிவகார செயலாளரின் தமிழ் மக்களை ஐக்கியப்படுத்தல் தொடர்பான உரையாடல் இந்தியாவுக்கான பலத்தையும் அதன்மூலமான பேரம்பேசலையும் வலுப்படுத்தவதற்கான சூழலை உருவாக்குவதே நோக்கமாக தெரிகிறது. அதாவது, வடக்கு-கிழக்கு அரசியல் தலைமைகளால் அவர்கள் சார்ந்த மக்களால் ஒன்றிணைக்கின்றபோது இலகுவாக அவர்களால் கையாளவும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கவும் அத்தகைய ஐக்கியம் தவிர்க்க முடியாதது என்பதை இந்திய தரப்பு உணர்ந்துள்ளது. தமிழ்த் தேசியத்தை மையப்படுத்தி இருக்கும் தமிழ்க் கட்சிகள் தமக்குள்ளே ஓர் இணைவை அல்லது ஐக்கியத்தை அல்லது ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க முடியாது என்பது வேடிக்கையான விடயம். தமிழ்த் தரப்புக்கள் தமிழ் மக்களைவிட தமிழ் மக்களின் அபிலாசைகளைவிட தமது கட்சிகளின் கொள்கைகளையும் தேர்தல் வெற்றிகளையும் அதன் மூலமான அரசியல் இருப்பையும் மேற்குறித்த ஐக்கியம் இன்மைக்கு அடிப்படை காரணமாகும். ஆனால், இந்தியா எதிர்பார்ப்பதுபோல் அரசியல் தலைமைகள் ஒருங்கிணைந்த தலைமை இந்தியா இலங்கையில் செல்வாக்கு செலுத்தவும் தென்னிலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவும் வழிவகுக்கும் எனக் கருதுகின்றது.

இவற்றைவிட, தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைக்கப்படுகின்ற போது பிறசக்திகளின் ஊடுருவல் அதன் ஆதிக்கம் வடக்கு - கிழக்கு நோக்கி சாத்தியப்பட முடியாத அளவுக்கு பாதுகாக்க முடியுமென இந்தியா கருதுகிறது. இலங்கை எப்போதும் இந்தியா எதிர்ப்பு வாதத்தையும் இந்தியாவை கையாள்கின்ற தன்மையையும் கொண்டிருக்கின்றபோது தமிழ்த் தரப்பு இந்தியாவுடன் சேர்ந்து பயணிப்பதும் தொடர்ச்சியான அனுபவங்களை வெளிப்படுத்தி கொண்டுள்ளது. 1962ஆம் ஆண்டு சீன - இந்திய யுத்தம் நிகழ்கின்றபோது சீனாவிற்கு எதிராக இந்தியாவிற்கு ஆதரவாக செயல்படும் இளைஞரணியை திரட்டி இந்தியாவிற்கு அனுப்ப திட்டமிட்டதும் அக்காலப்பகுதியி லிருந்து தற்போது வரை இந்திய எதிர்ப்பு வாதத்தை வெளிப்படுத்தாத போக்கைத் தமிழ் மக்கள் கொண்டிருக்கின்றனர். அத்தகைய தமிழ் மக்களிடமிருந்து எழுகின்ற அரசியல் தலைமைகள் அவ்வப்போது இந்தியாவின் கொள்கைகள் பொறுத்து முரண்பாடான முடிவுகளை முன்வைத்துள்ளனர். ஆகவே, இந்திய தரப்பின் தமிழ் அரசியல் தலைமைகளின் ஐக்கியம் பற்றிய வாதம் இலங்கையின் வடக்கு - கிழக்கை கடந்து இலங்கை தீவுக்கான அரசியலாகவும், இந்திய - இலங்கை உறவுக்கான அரசியலாகவும் கருதுகிறது. வடக்கு - கிழக்கு அரசியல் தலைமைகள் ஐக்கியப்படுவதென்பது இந்தியாவிற்கெதிரான பிறசக்திகளை தடுத்து நிறுத்துவதற்கான அடிப்படையேயாகும். குறிப்பாக, தென்னிலங்கையின் அனுசரணையோடு சீனாவின் செல்வாக்கு வடக்கு - கிழக்கில் அதிகரிப்பாதானது இந்தியாவுக்கு புவியியல் ரீதியிலான ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதோடு இந்தியாவுக்கான நிரந்தர வாய்ப்புக்கள் இல்லாமல் போகவும் இலங்கை தீவு முழுமையாக இந்தியாவை விட்டு விலகவும் வழிவகுத்துவிடுமென்ற சந்தேகம் இந்திய தரப்புக்கு உண்டு. எனவேதான் ஐக்கியத்தை வலியுறுத்தி பிரச்னைக்கான தீர்வை முதன்மைப்படுத்தி அதன் வழியொரு பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவது இந்தியாவின் நோக்கமாகும்.

இவற்றைவிட, கடந்த காலத்தில் இந்தியாவின் நடவடிக்கைகள்மீது அதிருப்தி கொண்ட அரசியல் தரப்புக்கள் சீன சார்பு மனநிலை கொண்ட அரசியல் தலைமைகளும் வடக்கு - கிழக்கில் காணப்படுகின்றன. எனவே, அத்தகைய சக்திகள் முழுமையாக சீன சார்பு நிலைப்பாட்டை எடுக்குமாயின் இந்தியா பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசியல் கட்சி அல்லது தமிழ்த் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் கட்சி சீனாவை அங்கீகரிக்க முயலுமாயின் அதன் விளைவுகள் இந்தியாவுக்கு ஆபத்தானதாகவே அமைந்துவிடும். தற்போதுகூட தென்னிலங்கையின் சீனா சார்புப் போக்கை முறியடிப்பதில் தமிழர் தரப்பு இந்தியாவிற்கு மிகப்பெரும் பங்களிப்பை செய்துள்ளது. தங்களின் அரசியல் பிரச்னையை அதற்கான 13ஆவது திருத்த சட்டம், 1987 உடன்படிக்கையென வடக்கு - கிழக்குடனான இந்திய அரசியல் உறவு வலுவானதாக கட்டுப்படுவதற்கும் அடிப்படையாக விளங்குகிறது. எனவே, தென்னிலங்கையின் சீன சார்பு நகர்வுகள் ஒவ்வொன்றுக்கும் எதிராக தமிழரசியல் தலைமைகளின் வெளிப்பாடுகள் இந்தியாவை எச்சரிக்கைக்கு உட்படுத்தி இலங்கை தொடர்பான கரிசனையை அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

எனவே, இந்திய வெளிவிவகார செயலாளர் உட்பட இந்திய தரப்பு தமிழர்களின் அரசியல் தலைமையின் ஐக்கியம் பற்றியும் 13ஆவது திருத்த சட்ட மூலம் இலங்கை தமிழர்களின் தீர்வின் அடிப்படையெனவும் விவாதித்ததன் எண்ணங்கள் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் இருப்பில் மாற்றத்தை கொடுக்கும் அம்சமாகவே நோக்கப்பட வேண்டும். இந்தியாவை மீறி தென்னிலங்கை செயல்படும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் இந்தியா வடக்கு - கிழக்கு தமிழர்களின் இருப்பை முதன்மைப்படுத்திக் கொண்டே இலங்கை தீவை தமது செல்வாக்குக்குள் வைத்திருக்க முயன்று வெற்றி பெற்று வருகிறது. இந்திய வெளிவிவகார செயலாளரின் விஜயமும் அத்தகைய முயற்சியின் பிரதிபலிப்பாகும். ஆனால், இலங்கை தமிழ் அரசியல் தலைமைகள் தமது முரண்பாட்டை கைவிட்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளை முன்னிறுத்தி ஐக்கியப்படுவதும் ஐக்கியப்படுவதற்கான அமைப்புக்களை கட்டி வளர்ப்பதும் அவற்றை ஓர் ஆரோக்கியமான கட்டமைப்பாக உருவாக்குவதும் அவசியமானதாகும். ■

நன்றி - அருவி



# இரகுநாத குமாரதாஸ மாப்பாண முதலியார்



**அருள்மிகு நல்லூர் கந்தசுவாமி திருக் கோயிலின் பத்தாவது நிர்வாக தலைவராக இருந்த இரகுநாத குமாரதாச மாப்பாண முதலியார் நேற்றுக் காலை சிவபதமடைந்தார். 1929 தை 15 ஆம் திகதி பிறந்த இவர் நேற்று தனது 92 வயதில் சிவப்பேறு பெற்றார்.**

*1964 டிசம்பர் 15 முதல் வைர நல்லூர் கந்த சுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக பணியாற்றிக்கொண்டிருப்பவர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாணமுதலியார் அவர்களாகும்.*

*ஏற்கனேவ ஆலய வழிநடத்தல் திறனில் தந்தை இரகுநாத மாப்பாண முதலியார் பின்னர் தமையன் சண்முகதாஸ மாப்பாண முதலியாரு டன் பணியாற்றிய அனுபவம் இருந்தமையாலும் இயல்பாகேவ முருகப் பெருமான் மீது தீராத பக்திப்பெருக்கை கொண்டிருந்தமையாலும் இவரது பணிக்காலம் ஆலய வளர்ச்சியில் மிகப் பெரும் தனித்துவமிக்கதாய் நகர்ந்து வந்தது.*

*அதுமட்டுமல்லாது எப்போதும் ஆலயத் திலேய இருந்து முருகனுக்கு நெருக்கமாக பணி யாற்றியதுடன் முருகனின் அன்புக்குப் பாத்திர மானவரான கடந்த 50 வருடங்களாக சேவயாற்றி வருகின்றார்.*

*மிக எளிமையாய் எவ்வித ஆடம்பரங்களும் அற்ற இவரது நிர்வாகத்திறனும் கோயிலுக்கான ஒவ்வொரு சதத்தையும் இறைதிருப்பணிக்காக்கும் நேர்த்தியிலும் இவரது பணிச்சிறப்பு எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது என்றால் மிகையில்லை.*

*கோவில் வளர்ச்சிக்கு ஏற்ப பக்தர் கூட்டமும் பெருமளவில் திரள திரள ஆலய வளாகமும் இவர் காலத்தில் விஸ்தரித்து வந்தமை குறிப்பிடத்தக் கது. ஆலயத்தைதயும் இன்னும் இன்னும் மெரு கேற்றி அழகுபடுத்தியதிலும் சரி நல்லூர் ஆலயம் அலங்காரக் கந்தன் என புகழப்பாடுமளவிற்கு முருகப் பெருமானின் அலங்காரத்தில் தனித்துவ மரபைக் கொண்டு வந்து அதனைத்தானே நேரடி யாக அமைத்து வந்தவர் குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆவார்.*

*இதுமட்டுமன்றி ஒவ்வொரு மகோற்சவத் திற்கு முன்பும் ஏதாவது திருப்பணியை நிறைவேற் றுவது என்னும் மரபும் நடைமுறைக்கு வந்தது இவருடைய காலத்திலேயே. அந்த வகை யில் இவரது காலத்தில் ஆலயத்தில் இடம்பெற்ற பெரும் திருப்பணிகள் சில ஷண்முகருக்கான அழகிய சிறிய கோபுரப்பணியும் நிறைவு கண்டு 1966 குடமுழுக்கு நிகழ்த்தப்பட்டது,*

*ஆலய மூலஸ்தானத்தை விடுத்து மற்ற அனைத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி அழகுற அமைத்து இன்றைய பெருங்கோவி லாக வளர்சியைடய இவரது பணிகள் உதவின,*

*மகாமண்டபம், ருத்திர மண்டபம் என்பன அழகு படுத்தப்பட்டன. முத்துககுமார சுவாமிக்கும் விமானத்துடன் கூடிய சந்நிதி அமைக்கப்பட்டது, தேர் முட்டி அமைக்கப்பட்டது.*

*இலங்கை கோவில்களுக்கே அடை யாளமாகவும் இன்றைய நல்லூரின் சின்னமாகத் திகழும் கோபுரத்திற்கு வெளியேயான யாழ்ப்பாண கலாச் சாரத்துடன் பின்னிப்பிணைந்த சொக் கட்டான் பந்தல் வடிவான வில்லு மண்டபத்தை அமைத்து யாழ்ப்பாணத் திற்கே தனித்துவ வரலாற்றை வித்திட் டவர். இதுவே மாப்பாணர்பாணி கைலயம்சத்தின் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது...*

*தொடர்ந்து வந்த ஆண்டுகளில் படிகளுடனான தேர் மண்டப அமைப்பும் அமைக்கப்பட்டது.*

*⏩1978 இல் வசந்தமண்டபம் இன்னும் பெரிதாக அழகுற அமைக்கப்பட்டது.*

*⏩ 2012இல் சண்முக நவதள ராஜேகாபுரமும், 2015இல் குபேர நவதள ராஜேகாபுரமும் அமைக்கப்பட்டது.*

*⏩ 2017இல் சண்முக தீர்த்த கேணி புனர்த்தானம் செய்யப்பட்டது.*

*⏩ 2018ஆம் ஆண்டு ஷண்முகருக்கான தனித்த பொன்னால் ஆன சுவர்ண சைப விமானம் அமைக்கப்பட்டது,*

*குமாரதாஸ் மாப்பாணருடன் அவரது புதல்வாரன இளவலும் சேர்ந்து ஆலயப்பணி களை மிக நேர்த்தியுடன் முன்னெடுத்து வந்தனர்.*

ஆலயத் திருப்பணிகள் எங்குமில்லாதவாறு தனித்து வமாய் நடைடைபெறுவது நல்லூர் வழக்கமாகும்.

முருகனின் உத்தரவுபடி ஒருவரது முடி விலேயே ஆலயம் இயங்குவதும் இவ்வால யத்தின் வெற்றிக்கு மிகப்பெரும் காரண மாகும். ஏழை, பணக்காரன் பேதமின்றி முருகனுக்காய் வழங்கும் பொருட்கள் அனைத்தும் முருகனது சொத்துடை

*மயாக்கப்பட்டு ஆலய வளாகத்தில் வைத்தே அதிகாரிகளின் நேரடிப் பார்வையுடன் அனைவரும் காணும் வண்ணம் வெளிப்படையாக வெளிப்பைடத் தன்மையுடேனேய அனைத்து பணிகளும் இடம்பெறும்.*

*அதைனவிட கட்டப்பணிகளா யினும் சரி வாகன பணிகளாயினும் சரி நல்லூரானுக்கான ஆபரணங்கள் இப்படி எதுவாயினும் உருவாக்குதற்கு அப்பால் அவற்றை மிகத்திறம்பட பராமரிப்பதிலும் அனைனத்துப் பொருட்கைளயும் காலாதி கால மாக பாவைனக்கு ஏற்றவகையில் பேணிப்பாதுகாப்பதிலும் கூட நல்லை முருகன் முன்னோடியா கவே இருக்கின்றார்.*

*ஆலய கட்டுமானங்கைளப் பொறுத்தவைரயில் ராஜேகாபுரத் துடனான இருமணிக்கூட்டு கோபுரமாயினும் சரி, கோபுரத் திற்கு முன்னால் கம்பீரமாக அமைக்கப்பட்ட திருவாசிவடி விலான வில்லு மண்டபமாயி னும் சரி ஏற்கனவே இருந்த திரா விட கட்டக் கலை மரபையும் தாண்டி ஏனைய பலதனித்துவ மரபுகள் போன்று மாப்பாணர் கட்டடப்பாணி என உலகவர லாற்றில் தனித்துவம் மிக்கதான பெருமையையும் நல்லூர் தன்னகத்தே கொண்டுள்ளது.*

*பின்னாட்களில் ஈழத்தின் பல ஆலயங்கள் இப்பாணியை பின்பற்றி எழுந்தைவயாகும்.*

*இவை மட்டுமல்லாது ஆலயத்தின் நிர்வாகி சிவாச் சாரியர்கள் அந்தணப் பெருமக்கள் முதல் பணியா ளர்கள், தொண்டர்கள், பக்தர்கள் வரை அனை வருக்கும்*

**(16 ஆம் பக்கம் பார்க்க)**

# பயணங்கள்!

- மாலி -

5





ஸ்ரீதர் படமாளிகை


மின்கம்ப விளக்கு



# அமைதியுடன் அடங்கும் இரவுகள்

## வாயினால் ஊதி 'ஸ்ராட்' ஆகும் மோட்டார் சைக்கிள்

வீதிகளில் நம் கவ னத்தை ஈர்க்கும் மற்றொன்று, தமிழ் இலக்கத் தககள் பதித்த மோட்டார் வாகனங்கள். யாழ்ப்பாணத் தின் 'பாரம்பரிய' மொறிஸ் மைனர் களும், ஏ-40, ஏ-50, ஏ-55களும் 'டாம்பீக' ஒஸ்ரின் கேம்பிரிட்ஜுகளும் சிறு அளவில் வீதிகளில் வலம் வருகின்றன. ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்களே அதிகமானவை.

தமிழீழத்தைக் குறிப்பிடும் வகையில் பொது வாக னங்களின் இலக்கத் தகடுகள் 'த' எழுத்தைக் கொண் டுள்ளன. எழுத்தையடுத்து, பிரான்ஸ் போன்ற நாடு களைப்போல் ஊரை அடையாளம்காளுாம் விதத்தில் ஊருக்குரிய இலக்கமும் கூடவே இருக்கிறது. இயக்கம் சார்ந்தவர்களின் வாகனங்கள் 'உ' எழுத்தைக் கொண்டி ருக்கின்றன. 'எ' பெண் போராளிகளின் வாகனங்கள். பொதுமக்களின் இந்த வாகனங்கள் மண்ணெண் ணெ யும் 'தின்னர்' எனப்படும் பெயின்ற் கரைக்கும் திரவமும் கலந்து விடப்பட்டு இயங்குகின்றன. வான்கள் போன்ற பெரிய வாகனங்கள் தாவர எண்ணெயில் இயங்குகின் றன. இந்த 'எரிபொருள் விற்பனை நிலையங்கள்' கோவில் வீதிகளில் காணப்படும் திருவிழாக்கால தேநீர்க் கடை கள்போன்று பிரதான வீதிகள், சந்திகளில் நகரில் காணப்படு கின்றன. போத்தல்களில் நிரப்பி, அடுக்கி வைத்திருப் பார்கள்.

இயக்க வாகனங்கள் பெற்றோலிலேயே இயங்கு கின்றன. யாழ். வைத்தியசாலை டாக்டர்களுக்கும் அவர்களது வாகனங்களுக்காக குறித்த அளவு பெற் றோல் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் ஒரு சுவா ரஷ்யம். இவை சில, வாயினால் ஊதி இயங்கவைக்கப் படுகின்றன, உண்மைதான்!

இவற்றின் 'ஹான்டிலி'ல் சிறிய குப்பியொன்று தொங்கிக்கொண்டிருக்கும். நோயாளிக்கு 'சலைன்' ஏற்றப்படுவதுபோல, மெல்லிதான குழாய் ஒன்றும் ஹான்டில் பகுதியிலிருந்து 'ஹாபரேற்றருக்கு' செல்லும். சைக்கிளை இயக்குமுன்னர் அந்தக் குழாயுள் குப்பி யிலிருந்து ஓரிரு 'துளிகள்' விட்டு, பின்னர் வாயினால் ஊதுவார்கள். அதன் பின்னர் 'கிக் ஸ்ராட்' செய்யும் போது சைக்கிள் சுலபமாகவே இயங்கிவிடுகிறது. குப்பிக்குள் இருந்து 'துளித்துளியாக' விடப்படும் அந்த 'மாஜிக் பொருள்' பெற்றோல். வாகனத்தைச் சுலபமாக இயங்கவைப்பதற்கு மட்டும் அருமருந்தாக அதனைப் பயன்படுத்துகிறார்கள்.

சைக்கிள்தான் இங்கு பிரதான போக்குவரத்து சாத னம் வீதிகளை நிறைத்துக் காணப்படும். முன்னரெல் லாம் பொதுவாக, பாடசாலை மாணவியரைத் தவிர பெண்கள் பெருமளவில் சைக்கிள்களில் செல்வதை யாழ்ப்பாணத்தில் காண்பதில்லை. இப்போது, தமது சைக்கிள்களில் பின்னுக்கும் முன்னுக்கும் ஒவ்வொரு வரை ஏற்றிக்கொண்டு வயதான பெண்கள், வயோதிபர், சிறுவர்கள் இவர்கள் தவிர, பெரும் உத்தியோகத்தர்களும் செல்கிறார்கள்.

நவீன சந்தையருகே யாழ் பஸ் நிலையம் இப்போது இல்லை. அது அங்கிருந்து சுமார் அரை மைல் தூத்துக்கப் பால், ஆரியகுளம் சந்திக்கு அணித்தாக, அத்தியடிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. யாழ். வைத்தியசாலை சூழ்ந்த, செஞ்சிலுவைச் சங்கத்தின் 'பாதுகாப்பு வலயத்துள்' பஸ் நிலையம் அமைவதனால், அது புதிய இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பதாக கூறினார்கள்.

பஸ் நிலையம் அமைந்திருந்த இடம் முழுமையும் மரங்கள் நாட்டப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றன. இந்த நிழல்மர நடுகையை குடாநாட்டின் பல இடங்களிலும், பல வீதியோரங்களிலும் காணமுடிகிறது. வல்லை வெளியிலும்கூட இம் மரநடுகை இடம்பெற்றிருக்கிறது.

பஸ் நிலையம் இடமாற்றப்பட்டாலும், நகர் சுறுசுறுப் பாகவே இருக்கிறது. அங்கு மற்றொரு சிறப்பான மாற் றம், வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள் அனைத் தும் தூய தமிழில் எழுதப்பட்டுள்ளன. கடைகளின் பெயரோடு, எவ்வகையான வர்த்தகம் என்பதும் பெயர்ப் பலகையில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். புடவைக் கடைகள் 'பட்டுப் புடவையகம்', 'பட்டுச் சோலை', 'ஆடையகம்' என்றும், பான்ஸி பொருள்கள் 'அழகுச் சோலை' என்றும், பலசரக்கு வியாபாரம் 'பல்பொருள் வாணிபம்' என்றும் இப்படிப் பல அழகான சொற்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இதேவைளை, சில சொற்கள் சற்று 'ஒருமாதிரியாக' வும் இருக்கின்றன. பாணுக்கு 'வெதுப்பி' என்று பெயரி டப்பட்டிருக்கிறது. பேக்கரி - வெதுப்பகம், புத்தக சாலை - பொத்தக சாலை, சைவ உணவகம் - மரக்கறி உணகம், தளபாடக் கடை - அணைக்கல நிலையம். இவை, அத்தகைய சில. வேறொரு நாட்டுப் பெயர் என் பதால் மலாயன் கபே, 'வேலன் மரக்கறி உணவகம்' என்று மாற்றப்பட்டிருக்கிறது. அன்ட் சன்ஸ். அன்ட் பிரதர்ஸ் என்பனவெல்லாம் 'சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்', 'சின்னத்துரை சகோதரர்கள்' என்றவாறு பொறிக்கப்பட் டுள்ளன. சுன்னாகம் செல்லும் வழியில் காங்கேசன்துறை வீதியில் 'விரிசுடர் எரிதரு விற்பனை நிலையம்' என்றொரு பெயர்ப் பலகையைக் கண்டேன். அது ஒரு விறகுகாலை.

சுவையருவி, குளிரருவி என்பன விடுதலைப் புலிகள் நடாத்தும் சாப்பாட்டு, குளிர்பான கடைகள். மின்சார நிலைய வீதியில் நவீன சந்தைக்கு முன்புறமாக அமைந் திருக்கின்றன. சுவையருவி ஈ. ஏ. பாய் கடை இருந்த கட்டடத்தில் இருக்கிறது. கடைகளுக்கு விடுதலைப் புலிகள் மின்சாரம் வழங்குகிறார்கள். விரும்பியவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், இது மிகவும் செலவா னது என்கிறார்கள் வர்த்தகர்கள். அதனால், மிகுந்த சிக் கனமாகவே அம் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். மறந்து, காற்றாடியை சற்று நேரம் இயங்க விட்டுவிட் டால் அவ்வளவுதான் பணத்தைக் காற்று அள்ளிச் சென்றுவிடும்.

'ஓகோ' என்று இல்லாவிட்டாலும், கடைகள் எல்லாமே இயங்குகின்றன. வின்ஸர் படமாளிகைக்கு அணித்தாக கஸ்தூரியார் வீதியில் ஏராளமான நகைக் கடைகள். என்ன தடை இருந்தாலும் பொருள்கள் கிடைக்கின்றன. ஆனால், அந்த தடை, தட்டுப்பாட் டுக்கு ஏற்றவிதத்தில் விலைகள் அதிகமாக இருக்கும். கடைகள் அனைத்திலும் விடுதலைப் புலிகளால் வழங் கப்பட்ட விற்பனை உத்தரவுப் பத்திரம் மாட்டப்பட் டிருக்கிறது. விற்பனை செய்யும் பொருள்கள் அனைத் துக்கும் ரசீது கொடுக்கப்படவேண்டும். இதனை மீறுப வர்கள் அபராதம் செலுத்த நேரும். வர்த்தகர்கள், விற் பனை விலையில் இரண்டு வீதத்தை புலிகளுக்கு செலுத்தவேண்டும். குறித்த கால எல்லையுள் அது செலுத்தப்படாவிட்டால் பின்னர் அதற்கான அபராத மும் செலுத்த நேரிடலாம். முன்னர் அரசாங்கம் பெற்ற வரியை வரியைவிட பெருமளவு வரி விடுதலைப் புலி களுக்கு சேருவதாக வர்த்தகர்கள் கூறுகிறார்கள்.


கடைகளில் விற்கப்படும் பொருள்களுக்கு கட்டுப் பாட்டு விலை எதுவும் இல்லை. சில பொருள்கள் சமயங் களில் பங்கீட்டு முறையில் வழங்கப்படுகின்றன. கட்டுப் பாட்டு விலையில் விற்கப்படும் அரிசிக்குச் சில சமயங் களில் தட்டுப்பாடு நிலவுகிறது.

தனியார் எவரும் நெல் கொள்முதல் செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி, பரந்தன் போன்ற இடங்களில் விவசாயிகள் விடுதலைப் புலிகளுக்குத்தான் நெல்லை விற்கமுடியும். அப்படி கொள்வனவுசெய்த நெல்லை புலிகள் தமது ஆலைகளில் குற்றி, வர்த்தகர்க ளுக்கு விற்பனை செய்வார்கள். இந்த ஆலைகளில் அரி சியைப் பெறுவதற்காக வர்த்தகர்களின் நீண்ட 'கியூ'வை காலை வேளைகளில் சில இடங்களில் காணலாம்.

சந்தைகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. கரையோர மீன்பிடி தளர்த்தப்பட்டிருந்த அந் நாள்களில் சைக்கிள்களில் மீன் விற்கும் வியாபாரிகளையும் காணக்கூடியதாக இருந்தது. பல்கலைக்கழகம், பாடசாலை கள் இயங்குகின்றன. புதிது புதிதாக கொட் டில்களிலும், முன்னைய ரியூட்டரிகளிலும் இயங்கும் சில புதிய பாடசாலைகளையும் யாழ்ப்பாணத்தில் காணலாம். இவை, இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளி லிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக் கான பாடசாலைகள். யாழ்ப்பாணத்து ரியூட்டரிகளும் 'பிஸி'யாகவே இயங்கு கின்றன. ஆரியகுளத்தருகே பலாலி வீதி யில் சென்றுகொண்டிருக்கையில் குளத் தின் அருகே ஏராளமான சைக்கிள்கள் ஒழுங்காக , பல வரிசைகளாக நிறுத்தப் பட்டிருந்தன.

(16 ஆம் பக்கம் பார்க்க...)


யாழ் பஸ்நிலையம்




சிறிய இடைவெளிக்கு பின்னர், மீண்டும் திரைப் படங்களில் நடிக்கிறார் வடிவேலு. அவர் புதிதாக நடிக் கும் படத்திற்கு “நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்” என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் முதல்பார்வை நேற்று வெளியானது.

நாய்கள் புடைசூழ வடிவேலு ஒய்யாரமாக ஸ்ரைலாக அமர்ந்துள்ள முதல்பார்வை வெளியிடப்பட்டுள்ளது. மற்ற நடிகர்கள் தேர்வு நடக்கிறது.

நாய் சேகர் என்ற படத்தில் நடிகர் சதீஸ் நடிக்கும் படம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டமையால், இந்தப் படத்திற்கு நாய் சேகர் ரிட்டர்ன்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை சுராஜ் இயக்க, லைகா தயாரிக்கிறது. சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.



மலையாளத்தில் வெளியான பிரேமம் படம்மூலம் அறிமுகமானவர் மடோனா செபஸ்ரியன். தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளிலும் தற்போது பல படங்களில் நடித்து வருகிறார் அவர்.

சற்று பருமனான தோற்றத்தை கொண்ட அவர் தனது உடல் எடையை வெகுவாக குறைத்து மெலிந்தவராக மாறியுள்ளார். அத்துடன், கவர்ச்சியான புகைப்படங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.



விஜயின் 66ஆவது படத்தை இயக்குநர் வம்சி இயக்குகிறார். இந்தப் படத்தில் விஜயின் மகளாக தெலுங்கின் பிரபல நடிகர் மகேஷ் பாபுவின் மகள் சித்தாராவை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது.

இயக்குநர் வம்சி தோழா, மகரிஷி உள்ளிட்ட வெற்றிப் படங்களை இயக்கியவர். இவர் மகேஷ் பாபுவின் மிகவிருப்பத்துக்குரிய இயக்குநர் என்பதால் பேச்சு சுமூகமாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம், படத்தில் வில்லனாக நடிக்க பிரபல தெலுங்கு நடிகர் நானியிடம் பேச்சு நடக்கிறது. இந்தப் படம் வழக்கமான விஜயின் படம் போல் குடும்பப் பற்றுமிக்க படமாக அமையும் என்று சொல்லப்படுகின்றது.

# திரை விமர்சனம்

| | |
|---|---|
| திரைப்படம் | - லிப்ட் |
| இயக்கம் | - வினீத் வரப்பிரசாத் |
| நடிப்பு | - கவின், அம்ரிதா |
| இசை | - பிரிட்டோ மைக்கல் |
| வெளியீடு | - 01 ஒக்ரோபர் 2021 |




தமிழ் சினிமாவில் வரும் வழக்கமான ஒரு பேய் படம்தான். பொதுவாக பேய் படங்களை ஒரு வீட்டை மையமாக வைத்து, பழங்கால அல்லது பாழடைந்த பங்களாவை மையமாக வைத்தே உருவாக்குவார்கள். இந்தப் படத்தில் ஒரு மின் தூக்கியை (லிப்ட்) வைத்து உருவாக்கியுள்ளனர். அதுதான் படத்தில் ஒரே வித்தியாசம். மற்றபடி பேய் பயமுறுத்தும் காட்சிகள் எல்லாமே வழக்கமானவையே.

மென்பொருள் வடிவமைப்பு நிறுவனம் ஒன்றில் குழுத் தலைவர் பதவிக்கு பெங்களூரிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வருகிறார் கவின். வேலைக்கு சேர்ந்த முதல் நாள் வீட்டுக்கு செல்ல ஆயத்தமாகும்போது நிறுவன மேலாளர் ஒரு வேலை கொடுக்க அதை செய்து முடிக்க இரவாகிவிடுகிறது. வீட்டுக்கு செல்ல மின்தூக்கியில் செல்லும்போது ஏதோ ஓர் அமானுஷ்யம் நடக்கிறது. கார் வரை சென்றவரை வெளியில் செல்ல விடாமல் மீண்டும் மின்தூக்கியால் அலுவலுகத்திற்கே இழுக்கப்படுகிறார் கவின். அவர் எவ்வளவோ முயன்றும் தப்ப முடியவில்லை. ஒரு கட்டத்தில் வேறோர் அறையில் சிக்கிய நாயகி அம்ரிதாவும் கவினுடன் சேர இருவரும் அலுவலகத்தை விட்டு தப்பிச் செல்ல முயல்கிறார்கள். அவர்கள் தப்பிச் சென்றார்களா, அவர்களை பேயாக துரத்துவது யார் என்பதே படத்தின் மீதிக் கதை.

ஒரு 9 மாடி அலுவலகம், ஒரு மின்தூக்கி முக்கியமான இரண்டு கதாபாத்திரங்கள் என இரண்டரை மணி நேரம் படத்தை பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் கொடுத்திருக்கிறார் இயக்குநர் வினீத் வரப்பிரசாத்.

கவின் படத்தின் கதையுடன் அப்படியே பொருந்திப் போகிறார். அம்ரிதா முதலில் அழகாக அறிமுகமாகி பின்னர் காணாமல் போய்விடுகிறார். இடைவேளைக்கு முன்பாகத்தான் மீண்டும் அறிமுகமாகிறார். பயப்படுவதை தவிர, நடிப்பதற்கு வேறு வேலை இல்லை.

படத்தில் ஒளிப்பதிவாளருக்குத்தான் அதிக வேலை. ஒரே ஒரு மின்தூக்கி, அதை எத்தனை கோணங்களில், எத்தனை விதமாகக் காட்ட முடியுமோ அதைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் ஒளிப்பதிவாளர். நம்மிலும் பயத்தை ஏற்படுத்துமளவுக்கு ஒளிப்பதிவு அமைந்துள்ளது. பிரிட்டோ மைக்கலின் இசை ஒரு பேய் படத்திற்கு என்ன அவசியமோ அதைக் கொடுத்திருக்கிறது.

யார் பேயாக கவினையும், அம்ரிதாவையும் விரட்டுகிறார்கள் என்பதை இறுதிக்கட்டத்துக்கு முன்பாகத்தான் காட்டுகிறார்கள். அவர்களிருவரை விரட்ட வேண்டிய அவசியம் என்ன? தங்கள் சாவுக்குக் காரணமானவர்களைத்தானே பேய்கள் பழி வாங்கும் என பல படங்களில் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தப் படத்தில் சம்பந்தமில்லாதவர்களைப் பழி வாங்குவதற்கான காரணம் தெளிவாக இல்லை.

பேய் படம் என்று சொல்லிவிட்டு, கடைசியில் கணனித்துறையில் வேலை பார்ப்பவர்களின் தற்கொலைக்கு அலுவலகப் பணியின் அழுத்தமே காரணம் என முடித்திருக்கிறார்கள்.



அடிக்கடி கவர்ச்சி காட்டும் படங்களை சமூகவலைதளங்களில் பதிவிடும் பழக்கம் கொண்டவர் மாளவிகா மோகனன். ஆனால், அவர் கடந்த வாரம் பகிர்ந்த படங் கள் இளைஞர்களின் இதயத்துடிப்பை எகிற வைத்துள்ளது.

தேவலோக நங்கை ஊர்வசி வேடத்தில் அவர் வெளியிட்டுள்ள படங்கள்தான் கடந்த வாரத்தை சமூக வலைத்தளங்களை சூடாக வைத்திருந்தது. அத்துடன், தனது படத்திற்கு “தொலைதூர காலத்திருந்து தொலைதூர நிலத்தில்” தலைப்பிட்டுள்ளார்.

மாளவிகா மோகனன் தற்போது தனுஸூடன் மாறன் என்ற படத்தில் நடித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜூன் நடித்துள்ள பான் இந்தியா படம் புஷ்பா. ராஷ்மிகா மந்தனா நாயகியாக நடித்துள்ளார். இரண்டு பாகங்களாக தயாராகியுள்ள இந்த படத்தின் முதல் பாகம் டிசெம்பர் 17ஆம் திகதி திரைக்கு வருகிறது.

இந்தப் படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாட கனடாவின் பிரபல நோரா பதேஹியை ஒப்பந்தம் செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றுது. நோரா பதேஹி பொலிவூட்டில் பல படங்களில் நடனமாடியிருக்கிறார். அங்கு அவரது நடனத்திற்கு ஒரு ரசிகர் வட்டமும் உருவாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஒரு திருடன் நிகரில்லா வீரனான கதை



ஆர்ஜென்ரீனாவின் வீதிகளில் கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் ரசிகர்களைக் கண்டுவிட முடியும். மெஸ்ஸியையும் பார்சிலோனாவையும் ஆதரிக்கும் ரசிகர்கள் போர்த்துக்கல் நகரங்களில் நிச்சயம் இருப்பார் கள். ஆனால், இந்த இருவரையும் கொண்டாடாத ஓர் ஊர் இருக்கிறது. அது மால்மோ, ஸ்வீடனில் உள்ள ஒரு நகரம்.

அந்த ஊர் சிறுவர்களைப் பொறுத்தவரை 'அவர்' ஒருவர்தான் முன்மாதிரி; அவர்தான் உதைபந்தாட்ட உலகின் நாயகன். அவர்கள் கொண்டாடும் ஒரே பெயர் 'ஸ்லாடன்' (ZLATAN). தங்கள் நகரத்தில் மோட்டார் சைக்கிள் திருடி, பிறகு உலகம் வியக்கும் ஒரு நட்சத்திர மாக உயர்ந்து, வறுமையில் வாடும் தங்களையெல்லாம் போராடத் தூண்டும் அவர்தான் அவர்களுக்கு 'உதைபந்தாட்ட கடவுள்'. ஸ்லாடன் இப்ராஹிமோவிச் - உதைபந்தாட்ட உலகின் 'தனி ஒருவன்'!

மெஸ்ஸியின் ட்ரிபிள், ரொனால்டோவின் திறமை, பெக்காமின் ப்றீ - கிக், ஷிடேனின் கடத்தும் நுட்பம் ஆகியவற்றைக் கண்டு சிலாகித்துக் கொண்டே இருப் பான் உதைபந தாட்ட வெறியன். அவனிடம் சென்று "ஸ்லாடனிடம் என்ன பிடிக்கும்?" எனக் கேட்டால், புன்னகையே பதிலாக வரும். காரணம், அவனால் ஸ்லாடனின் சிறப்பு களைப் பட்டியலிட முடியாது. ஏனெனில், அவர் ஒரு வாழும் மியூசியம். அவரின் ஒவ்வொரு செயலும் அசைவும் வித்தியாச மானவை; கொஞ்சம் விநோதமானவை; தனித்துவம் வாய்ந்தவை; ஒவ்வொன்றும் ரசிக்கத் தூண்டுபவை. களத்தில் இறங்கி னால் கோல்கள் பறக்கும். பேட்டி கொடுத்தால் மைக்கு கள் தெறிக்கும். உதைபந்தாட்ட உலகம் கண்ட தனித்து வமான வீரர் ஸ்லாடன்.

22 கோடி டொலர்கள் கொடுத்து வாங்கி, நெய் மருக்கு 'மதிப்பான வீரர்' என்ற அடையாளத்தைக் கொடுத்தது பாரிஸ் சென். ஜெர்மைன் அணி. ஆனால், உலக அரங்கில் அந்த அணிக்கு ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்தார் ஸ்லாடன். 31 வயதில் அந்த அணியுடன் ஒப்பந்தமாகிறார். 'வயதாகிவிட்டது. கடைசிக் காலத்தை பிரான்ஸில் நிம்மதி யாகக் கழிக்க வருகிறார்' என்றார்கள். 'வயசானாலும் என் ஸ்ரைலும் திறமையும் என்னைவிட்டுப் போகாது' என்று சொல்லா மல் சொன்னார். அந்த அணிக் காக 180 போட்டிகளில் 156 கோல்கள். ஒரு சம்பியனுக்கு ஏங்கியிருந்த அணிக்கு நான்கு ஆண்டுகளில் 12 சம்பியன் பட்டங்களை வென்று கொடுத்தார்.

பாரிஸ் அணியின் சரித்திரம், 'நெய்மாருக்கு முன், நெய்மருக்குப் பின்' என எழுதப்படாது. அது 'ஸ்லாடனுக்கு முன், ஸ்லாடனுக்குப் பின்' என்றுதான் எழுதப்படும். அனைவரும் ஆடுவதைப்போல் ஆடுவது அவரின் ஸ்ரைல் அல்ல. அவரின் ஸ்ரைல் தனி ஸ்ரைல். அவரின் ஆட்டம் தனியாகத் தெரியும். எப்பேர்பட்ட நட்சத்திரமாக இருந்தாலும் தங்கள் திறமையை பொக்ஸூக்கு வெளியேதான் காட்டுவார்கள். பொக் ஸூக்குள் கோலடிக்க முயல்வது வழக்கமான ஷொட் கள் மூலம்தான். ஆனால், ஸ்லாடன் பொக்ஸூக்குள் தான் வித்தையே காட்டுவார். காலணியின் அடிப்பகுதி யைக் கொண்டுகூட பல கோல்கள் அடித்து அசத்தி யவர். 'குங்பூ கிக்' ஸ்லாடனின் சிறப்புக்களில் அதிசிறந் தது.

இவரைப் போன்ற மனப்பாங்கான ஒரு வீரரைக் கண்டிட முடியாது. தற்பெருமைகொண்டவர், கோபக் காரர், சண்டைக்காரர். இவற்றுக்காக அவரை வெறுத்து விட முடியாது. ஒருவரை இகழ்ந்து இவர் சொல்வதை தன்னை பற்றிப் பெருமையாகச் சொல்வதைக்கூட நம் மால் ரசிக்க முடியும். அவருக்குள் ஷேக்ஸ்பியர் ஒளிந் திருக்கிறாரோ என்றுகூடத் தோன்றும். உதைபந்தாட்ட உலகமே கொண்டாடும் பயிற்றுவிப்பாளர் கார்டி யாலோ. அவர் பயிற்சியின் கீழ் விளையாடாத வீரர்கள் கூட அவரைப் புகழ்வர். ஆனால், ஸ்லாடனைப்போல் கார்டியாலோவை வறுத்தெடுத்த ஆள் நிச்சயம் இருக்க முடியாது.

பார்சிலோனா அணியில் அவர் ஆடியபோது இரு வருக்கும் முட்டிக்கொள்ள, பிறகு ஒருமுறை அவரை பிரித்து மேய்ந்தார். 'அவர் பெராரியை வாங்கிவிட்டு, அதை பியட் காரைப்போல் ஓட்டுகிறார்' என்று சொல்ல பல மாதங்கள் டிரெண்டிங்கில் இருந்தது அந்த வசனம். 'மெஸ்ஸி, இனியஸ்டா போன்றோரெல்லாம் பாடசாலை மாணவன்போல் கார்டியாலோ சொல்வதை யெல்லாம் கேட்பார்கள். என்னால் அதெல்லாம் முடியாது' என்று தில்லாகக் கூறினார். இதே வார்த்தை களை வேறொரு வீரன் சொல்லியிருந்தால் மெஸ்ஸியின் ரசிகர்கள் காலிசெய்திருப்பார்கள். இது ஸ்லாடன் ஆயிற்றே!

சொற்களால் மட்டுமல்ல, நேரடியாகவும் பலரைத் தாக்கி சர்ச்சைகளில் சிக்கியுள்ளார் ஸ்லாடன். எதிர் அணி வீரர்களை மட்டுமல்ல சொந்த அணியின் வீரர் களையே பலமுறை பதம்பார்த்துள்ளார். பலரையும் அடித்துள்ளார், உதைத்துள்ளார், மிதித்துள்ளார். சேரியில் இருந்து வந்தவர். ஏழ்மையை, வறுமையை, புறக்கணிப்பை அனுபவித்துவந்தவர். வாழ்க்கையின் மறுமுகத்தை, கோரமுகத்தை அருகில் நின்று பார்த்துணர்ந்தவர்.

ஸ்லாடனின் அப்பா, பொஸ்னியாவைச் சேர்ந்தவர். அம்மா குரோஷியா. 1981ஆம் ஆண்டில் ஸ்லாடன் பிறக்க இரண்டு ஆண்டுகளில் இருவரும் விவாகரத்துப் பெற்றனர். உடன்பிறந்தவர்கள் ஐந்து பேர். முதலில் அம்மாவுடன்தான் இருந்தான். அரவணைப்பு கிடைக்க வில்லை. பல நேரங்களில் வீட்டைவிட்டு வெளியேற் றப்பட, வெளியில் இருந்த மைதானம் அவனுக்கு உறைவிடமானது. சிறிது காலத்தில் உலகமாகவுமானது. ஒரு பிரச்னையால் அப்பாவுடன் வளரத் தொடர்கிறான். அவர் தன் பிரச்னைகளில் மூழ்கிக்கிடக்க, தனிமையும் ஏழ்மையும் மொத்தமாக அவனை ஆட்கொண்டது. ரோஷ ன்கார்ட் நகரச் சிறுவர்களோடு சேர்ந்துகொண்டு சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் திருடத் தொடங்கி னான். உதைபந்தாட்டம் பொழுதுபோக்காகவும், திருட்டு ஒரு தொழிலாகவும் மாறிப்போனது. 'அவன் நல்ல திறமையான திருடன்' என அவன் நண்பர்களே கூறுகிறார்கள்.

அவனை சரிசெய்ய, அவனைக் உதைபந்தாட்ட பயிற்சியில் பயிற்றுவிப்பாளர் மூழ்கடிக்க, ஒருநாள் அவர் வண்டியையே களவாடி சென்றானாம் இளம் ஸ்லாடன். பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக உதைபந் தாட்டத்தின் மீது கவனம் செலுத்த, தன் கோபம், முரட்டுத்தனத்துக்கெல்லாம் களத்தில் வடிவம் கொடுத் தான். மெஸ்ஸி, ரொனால்டோவைபோல் தன் பதின் பருவத்திலேயே பெயர் பெற்றவன் அல்ல அவன். கொஞ்சம் கொஞ்சமாக தன்னைச் செதுக்கிக்கொண் டான். இதோ இன்று 33 பதக்கங்கள் வென்று, கழகங் களுக்காக அதிக பதக்கங்கள் வென்றவர்கள் பட்டியலில் அவர்களுக்கு முன் நிற்கிறான்.

ஸ்லாடனின் சண்டைகளைவிட, சச்சரவுகளைவிட ஸ்லாடனின் பேட்டிகள் எல்லாம் மரண வைரல். அதற்காகவே அவரின் ரசிகர்கள் ஆனவர்களும் உண்டு.

ஆர்சனல் கழகத்தின் லீக்கில் மாபெரும் சக்தியாகக் கிளம்பிக்கொண்டிருந்தது. அப்போது ஸ்லாடனுக்கு வயது 17. உதைபந்தாட்ட அணிகள் இளம் வீரர்களை ஒப்பந்தம் செய்வதற்கு பயிற்சி ஆட்டம் பார்ப்பது வழக்கம். ஆர்சனல் அணியின் பயிற்றுவிப்பாளர் ஆர்சன் வெங்கர், ஸ்லாடனை பயிற்சி ஆட்டத்துக்கு அழைக்கி றார். மாபெரும் அணியின் மிகச்சிறந்த பயிற்சியாளர் அழைக்கிறார். புறக்கணிக்கிறான் ஸ்லாடன். வெங் கருக்கு ஆச்சர்யம்... அதிர்ச்சி! 'ஸ்லாடன் பயிற்சி ஆட்டத்துக்கு எல்லாம் வரமாட்டான்' என்று ஸ்லாடன் கூறியபோது, அவன் வயது 17. வெங்கருக்கு சொன்ன பதில் ஒட்டுமொத்த உதைபந்தாட்ட உலகையும் ஒரு நிமிடம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்த தைரியம், அந்த கெத்து... அதான் ஸ்லாடன்!

அவர் எப்போது பேசினாலும், தன்னையே மூன்றாம் நபர்போலத்தான் குறிப்பிடுவார். உதாரணமாக, 'இது என்னுடையது' என்று கூற மாட்டார். 'இது ஸ்லாடனுடையது' என்பார். இப்படி அனைத்திலும் அவர் தனித்துவமானவர். தன்னை எந்த இடத்திலும் உயர்த்தித்தான் பேசுவார். எரிக் கான்டோனா, மன்செஸ் டர் யுனைடெட் அணியின் முன்னாள் தலைவர். 'கிங் ஒவ் மன்செஸ்டர்' என்று அழைக்கப்பட்டவர். 'அவரைப்போல் நீங்களும் மன்செஸ்டரின் கிங் ஆவீர்களா?' என்று கேட்க, 'இல்லை நான் மன்செஸ்டரின் கடவுளாக இருப்பேன்', என்று அவர் பதிலளிக்க, அதிர்ச்சியாகினர் மன்செஸ்டர் யுனைடெட் ரசிகர்கள். இதுதான் ஸ்லாடன். தனக்கு மேலானவர் எவருமே இல்லை என நினைப்பவர். பொதுவாகவே 'நான்' என்ற அகந்தையை வெறுக்கும் இந்த உலகம், ஸ்லாடனின் அகந்தையை மட்டும் ரசிப்பது விநோத முரண்.

மூர்க்கத்தனமும் தற்பெருமையும் நிறைந்தவர் என அவரை ஒதுக்கிவிட முடியாது. இதுதான் ஸ்லாடன் என்று நீங்கள் நினைத்தால், அது அல்ல அவர். ஏனெனில், அவர் ஸ்லாடன். 'என்னால் அமைதியாகவும் இருக்க முடியும்' என்று சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பேட்டியில் கூறியிருந்தார். பலமுறை தனக்குள் உறங்கிக் கொண்டிருந்த அந்த 'இனிய' மிருகத்தையும் நடமாட விட்டுள்ளார். 2015ஆம் ஆண்டு ஒரு போட்டியில் கோல் அடித்த ஸ்லாடன், அதைக் கொண்டாட தன் ஜேர்சியைக் கழற்றினார். வழக்கமாக அவர் உடலை அலங்கரித்திருக்கும் டாட்டூக்களுக்கு நடுவே பல புதிய தற்காலிக டாட்டூக்கள். பெயர்கள்போல் தெரிந்தன. ஆம், உலகெங்கும் பசியால் செத்துக்கொண்டிருக்கும் 50 பேரின் பெயர்களை தன் உடலில் பச்சை குத்தியிருந்தார் இந்தச் சண்டைக்காரர். பசியின் கொடுமையை உலகுக்கு உணர்த்த... இது போல் பல சம்பவங்கள் உள்ளன.

மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக விளையாடி வரும் ஸ்லாடன், கடந்த ஏப்ரல் மாதம் காயமடைந்தார். 'இன்னும் ஒரு வருடம் ஆகிவிடும். ஸ்லாடனின் உதைபந்தாட்ட வாழ்க்கை முடிந்தது' என்றார்கள். மன்செஸ்டர் அணியும் அவரது ஒப்பந்தக் காலம் முடிந்ததும், அவரை விலத்தியது. அவர் அணிந்திருந்த 9ஆம் இலக்க சீருடையை அவர் அனுமதியோடு தனதாக்கினார் லுகாகு. விடுவாரா ஸ்லாடன்? 'மன்செஸ்டரின் கடவுள் ஆவேன்' என சொன்ன வராயிற்றே. வேகமாக தன்னை தயார்படுத்தினார். ஐந்தே மாதங்களில் அவர் தயார். மீண்டும் அவரை மேலதிக வீரராக ஒப்பந்தம் செய்தது யுனைட்டெட். ரூனி விட்டுச் சென்ற 10ஆம் இலக்க சீருடை இப்போது அவருடையது. தனது ருவிட்டரில் பதிவிட்டார்- 'I never left. I just upgraded my number'. மீண்டும் அதிர்ந்தது மான்செஸ்டர். இதுதான் ஸ்லாடன்!

ஸ்லாடன் ஒருமுறை சொன்னது, 'நான் கண்ணாடி முன்பு நின்றால், என் கண்களுக்கு எதுவுமே தெரியாது. ஏனெனில், இந்த உலகத்தில் ஒரே ஒரு ஸ்லாடன்தான்' என்றார். உண்மை. மெஸ்ஸிக்கு முன்பு மரடோனா இருந்தார். இப்போது நெய்மார். கிறிஸ்ரியானோ ரொனால்டோவுக்கு முன்பு ரொனால்டோ நஸாரியோ இருந்தார். இப்போது எம்பாப்பே எழுந்துகொண்டி ருக்கிறார். எப்படிப்பட்ட வீரனைப்போலவும் முன்பு ஒருவர் இருந்துள்ளனர். புதிதாக ஒருவர் பிறக்கிறார். ஆனால், ஸ்லாடனைப்போல்! அவருக்கு முன்பும் அப்படி ஒருவர் இருந்ததில்லை. இனியும் ஓர் ஆள் பிறக்கப்போவதில்லை.



# அகதியாக இங்கிலாந்துக்கு வந்தவர் இலக்கிய நோபல் விருது பெறுகிறார்

**வெவ்வேறு கண்டங்கள், கலாச்சாரங்களுக்கு இடையே சிக்கிக் கொள்ளும் அகதிகளின் வாழ்க்கையை தத்ரூபமாக கொண்டுவந்ததற்காக அப்துல் ரசாக் நோபல் விருது பெறுகிறார்.**

**பவித்ரா**



தனது படைப்புகளில் வெவ்வேறு கண்டங்கள், கலாச்சாரங்களுக்கு இடையே சிக்கிக் கொள்ளும் அகதிகளின் வாழ்க்கையை தத்ரூபமாக கொண்டு வந்ததற்காக தான்சானியா நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் அப்துல் ரசாக் குர்னாவுக்கு இவ்வருடத்துக்கான நோபல் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும்.

அந்த வகையில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆப்பிரிக்காவின் தான்சானியாவைப் பூர்வீகமாகக் கொண்டு சான்ஸிபாரில் வளர்ந்து பின்னர் 1960களில் இங்கிலாந்துக்கு அகதியாக வந்து சேர்ந்த அப்துல்ரசாக் குர்னா இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தனது படைப்புகளில் வெவ்வேறு கண்டங்கள், கலாச்சாரங்களுக்கு இடையே சிக்கிக் கொள்ளும் அகதிகளின் வாழ்க்கையை தத்ரூப மாக கொண்டுவந்ததற்காக அவருக்கு நோபல் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

73 வயதான அப்துல்ரசாக் குர்னா தான்சானி யாவை பூர்விகமாக கொண்டவர். 1960 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு அகதியாக வந்து சேர்ந்த அப்துல் ரசாக் குர்னா, 10 நாவல்களை எழுதியுள்ளார். 1994-ஆம் ஆண்டு இவரால் வெளியிடப்பட்ட பாரடைஸ், 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான்சானியாவில் வளர்ந்த ஒரு சிறுவனின் கதையை கூறியது. புக்கர் பரிசையும் வென்றுள்ளது.

அப்துல்ரசாக் குர்னா இங்கிலாந்தின் கென்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியாக இருக்கிறார்.

அப்துல்ரசாக் குர்னாவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசுடன் 1.14 மில்லியன் டாலர் ரொக்கப் பணமும் பரிசாக வழங்கப்படும். இந்த உயரிய விருதுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அப்துல்ரசாக் குர்னா மகிழ்ச்சியுடன் கூறுகையில், "இது மிகவும் சிறந்தது - இது ஒரு பெரிய பரிசு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அறிவிக்கப்பட்டதை கேட்கும்வரை என்னால் நம்ப முடியவில்லை" என்று கூறியுள்ளார்.

இந்த விருது அறிவித்த இலக்கியத்திற்கான நோபல் குழு வெளியிட்ட ஒரு அறிக்கையில்கூறியிருப்பதாவது:

"அப்துல்ரசாக் குர்னாவின் உண்மைக்கான அர்ப்பணிப்பு மற்றும் எளிமைப்படுத்துவதில் அவரது வெறுப்பு வியக்கத்தக்கது. அவரது நாவல்கள் ஒரே மாதிரியான விளக்கங்களிலிருந்து பின்வாங்குகின்றன. உலகின் பிற பகுதிகளில் பலருக்கு அறிமுகமில்லாத கலாச்சார ரீதியாக பன்முகப்படுத்தப்பட்ட கிழக்கு ஆபிரிக்காவிற்கு எங்கள் முழு அளவிலான பார்வையைத் திறக்கின்றன."

இலக்கியத்திற்கான நோபல் குழு இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.

# சிவகுமாரனின் அட்டை படத்துடன் ஒக்ரோபர் மாத ஞானம் சஞ்சிகை


**அருண்மொழி**

கலை இலக்கிய மாத சஞ்சிகையான "ஞானம்" ஒக்ரோபர் மாத இதழ் சாகித்திய ரத்தினா கே.எஸ்.சிவகுமாரனின் அட்டைப் படத்துடன் வழமையான இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், இலக்கியச் செய்திகளுடன் வெளிவந்திருக்கின்றது.

கே.எஸ்.சிவகுமாரன் குறித்த கட்டுரையை ஞானம் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரம் எழுதியிருக்கின்றார். "இலங்கை அரசின் 2020ஆம் ஆண்டுக்கான சாகித்திய ரத்தினா உயர் இலக்கிய விருதினை கே. எஸ். சிவகுமாரன் பெற்றுள்ளார். கடந்த ஆறு தசாப்தங்களாக தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிவரும் கே.எஸ். சிவகுமாரன் திறனாய்வு, பத்தியெழுத்து, ஆக்க இலக்கியம், பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஆங்கில ஆசிரியர் எனப் பல் துறைகளில் இயங்கி வருபவர்" எனக் குறிப்பிட்டு கே.எஸ். சிவகுமாரனின் இலக்கச் சாதனைகளை அவர் விளக்குகிறார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் இலக்கிய விமர்சனங்களையும், திறனாய்வுக் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருப்பவர் என்று சொன்னால் உடனடியாக நினைவுக்கு வரவேண்டியவர். சழவகுமாரன்தான். அதேபோல ஒலிபரப்புத் துறையிலும் இரண்டு மொழிகளிலும் பணியாற்றியவரும் அவர்தான். சாகித்திய ரத்தினா விருதை அவர் பெற்றிருக்கும் நிலையில், அட்டைப்படத்தில் அவரை ஞானம் கௌரவித்திருப்பது பொருத்தமான ஒன்றுதான்.

இதனைவிட, காசி ஆனந்தன், பேராசிரியர் என். சண்முகலிங்கன், கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ், வடகோவை பூ. க. இராசரத்தினம் ஆகியோரின் கட்டுரைகளும், ஏலையா க. முருகதாசன் (ஜேர்மனி), கிறிஸ்டி நல்லரெத்தினம் (அவுஸ்திரேலியா), ஏ. பீர்முகம்மது, ஜதினைதா ஷெரீப், இணுவையூர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் ஆகியோரின் சிறுகதைகளும், கீத்தா பரமானந்தன், ஜனனி வேணுகானன், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், அகளங்கன், கே.சச்சிதானந்தன், சோ.ப., ஷெல்லிதாசன் ஆகியோரின் கவிதைகளும் ஞானம் சஞ்சிகையின் ஒக்ரோபர் மாத இதழை அலங்கரிக்கின்றன.




**மணிமாலா - கனடா**

# இனிய நந்தவனம் - கனடா சிறப்பிதழ்




தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் இனிய நந்த வனம் கனடா சிறப்பிதழ் ரொறன் ரோவில் உள்ள பைரவி மியூசிக் அக்கடமி கலையகத்தில் கடந்த வாரம் மிகவும் சிறப்பாக வெளியிடப் பெற்றது. இந்த நிகழ்வுக்கு கனடா உதயன் ஆசிரியரும், இனிய நந்த வனம் ஆலோசனைக்குழு உறுப்பின ருமான ஆர். என். லோகேந்திர லிங்கம் தலைமை தாங்கி நடத்தினார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து வெளியீட்டு நிகழ்வு ஆரம்பமானது. விழாத் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கத்தின் உரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம் பெற்றன. எழுத்தாளர் வாகீசன், கவிதா செந்தில், கணபதி ரவீந்திரன் ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன் நூல் பற்றிய ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து இனிய நந்தவனம் கனடா மலர் வெளியிடப் பெற்றது. முதற் பிரதியை எழுத் தாளர் குரு அரவிந்தனிடமிருந்து வர்த்தகப் பிரமுகரும், கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவருமான சாந்தா பஞ்சலிங்கம் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை வர்த்தகப் பிரமுகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கலாநிதி மைதிலி தயாநிதி, மு. முருகேஷ் ஆகியோரது நூல் ஆய்வுக்கட்டுரைகள், எழுத்தாளர் குரு அரவிந்தனுடனான நேர்காணல், இந்திராணி நாகேந்திரலிங்கத்துடன் உரையாடல், நூல் நயம், சசிகலா நரேந்திரன் பற்றிய அறிமுகம், மற்றும் ராஜ்ஜா, நாச்சியார், நந்த வனம் சந்திரசேகரன், பா. தென்றல், மாலதி சந்திரசேகரன், மு. முருகேஷ் ஆகியோரது ஆக்கங்கள். ஆர். என். லோகேந்திரலிங்கம், மாலினி அரவிந்தன் ஆகியோரது சிறுகதைகள் மேலும் பல ஆக்கங்கள் இந்தக் கனடா சிறப்பிதழில் இடம் பெற்றிருக்கின்றன.


அதன்பின் கனடா மலர் பற்றிய பார்வையாளர்களின் கருத்துப் பரிமாறல் இடம் பெற்றது. மலரில் இடம் பெற்ற அகணி சுரேஸின் பாடல் இப்போது ஒலி வடிவம் பெற்றிருப்பதாக கவிஞர் அகணி சுரேஸ் தெரிவித்தார். குமரகுரு, ஞான கணேசன், இந்திராணி, சசிகலா. சிவா ஆகியோர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். உலகமெங்கும் உள்ள ஒவ்வொரு தமிழரின் திறமையையும் இனங்கண்டு அவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் இனிய நந்தவனம் ஆசிரியரான ந.சந்திரசேகரனைப் பலரும் பாராட்டித் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். ஆக்கங்கள் இடம் பெற்றவர்களின் சார்பாக எழுத்தாளர் குரு அரவிந்தன் நன்றியுரை வழங்கினார்.

ஈழநாடு



# உமா வருகிறாள்

ந. ஜெயரூபலிங்கம்



கையில் ஒரு கப் தேநீருடன் சோபாவிலிருந்து கொண்டு தொலைக்காட்சியின் ரிமோட்டைக் கையில் எடுக்க எனது போன் அடிக்கும் சத்தம் கேட்டது. எங்கே எனது போன் என்று சுற்றிப் பார்த்த எனக்கு வேலையால் வந்ததும் சார்ஜ் இறங்கியிருந்ததால் பெட்ரூமில் சார்ஜ் பண்ணப் போட்டது ஞாபகம் வந்தது.

இந்தக் கிழமை முழுக்க வேலையில் ரொம்ப பிசி. இன்று வெள்ளிக்கிழமை வேலைக் களைப்போடு வந்து ஒரு தேத்தண்ணி நிம்மதியாக இருந்து குடிப்போம் என்று உட்கார்ந்தால் யாருக்கோ பொறுக்கவில்லை போலும். பேசாமல் இருப்போமா என்று ஒரு யோசனை தோன்றியது. ஆனாலும் என் மகன் சேகர் அல்லது மகள் ரம்யா ஆக இருந்தாலும் என்று நினைத்தபடி தேநீர் கோப்பையை மேசையில் வைத்துவிட்டு மாடிப்படியில் எனது படுக்கை அறை நோக்கி வேகமாகப் படி ஏறினேன்.

நான் எதிர்பார்த்தது சரிதான். மகன் தான் போன் பண்ணுகிறான்.

“ஹலோ”

“அம்மா பிசியோ? ஏன் இவ்வளவு நேரம் எடுத்தது உங்களுக்குப் போனை எடுக்க?”

“இல்லை சேகர். போன் பெட்ரூமில சார்ஜ் பண்ண போட்டனான். கீழே போகும்போது எடுத்துக் கொண்டு போக மறந்து போனேன். அது தான் எடுக்க கொஞ்ச நேரம் எடுத்தது.”

“நானும் பிசி அம்மா. இந்த வீக்கெண்ட் வீட்டுக்கு வாறன் என்று சொல்லத்தான் போன் பண்ணினேன்.”

“எப்ப வருவாய்?”

“காலையில் எட்டு மணிக்கு வெளிக்கிட்டால் ஒரு பதினொரு மணிக்குள் வீட்டுக்கு வந்து விடுவேன். வெளிக்கிடும் போது வாட்ஸ்அப் மெசேஜ் போடுகிறேன். திங்கட்கிழமை காலையில் ஆறு மணிக்கு வெளிக்கிட்டால் வேலைக்கு நேரத்துக்கு வந்து விடுவேன்.”

“ஓ.கே சேகர்.”

“ஒன்று சொல்ல மறந்திட்டன். இங்கு இருக்கும் என்னுடைய ஃபிரெண்ட் உமாவைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். கெஸ்ட் ரூமை ரெடி பண்ணி வையுங்க பிளீஸ். சீ யூ டுமாரோ.” என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

உமா என்று சொல்லிப் போட்டு என்னை யாரந்த உமா என்று கேட்க விடாமல் அவசரமாக போனை வைத்தபடியால் இது அவனுடைய கேர்ள் ஃப்ரெண்டாகத் தானிருக்க வேண்டும். நேரடியாக கொண்டு வந்து அறிமுகம் செய்யப் போகிறான் போல. எனது வருங்கால மருமகள் நாளைக்கு வரப் போகிறாள். எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. இந்த நேரம் பார்த்து வீட்டில் யாரும் இல்லை.

முதலில் இவருக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்ல வேண்டும். அவரும் சந்தோஷப் படுவார்.

அவசரமாய் போன் பண்ணினால் நேரே வாய்ஸ் மெயிலுக்குப் போகுது. என்ர மனுசன் எப்படிக் கண்டுபிடிக்கிறவரோ தெரியாது, எப்ப நான் அவசரமாக அவரோட கதைக்க வேண்டும் என்று போன் எடுத்தாலும் அப்பதான் அவர் வேலையில முக்கியமான மீட்டிங்கில போனை சைலன்ட் ஆக வைத்து விட்டு இருப்பார் அல்லது டியூப் ட்ரெயினில் அண்டர்கிரவுண்டில் இருப்பார். இந்த நேரம் ட்ரெயினில் தான் இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

சரி மகளுக்குப் போன் பண்ணிப் பார்ப்பம். வருங்கால அண்ணியோட அண்ணன் வருகிறான் என்றால் ரம்யா சந்தோஷப் படுவாள்.

அடிப்பாவி உடனேயே கட் பண்ணுறாளே! அம்மாவின் போன் எடுக்காமல் என்னடி உனக்கு அவ்வளவு முக்கியமான வேலை? வீட்டுக்கு வா உன்னை நல்லா விசாரிக்க வேண்டும்.

என்னுடைய அம்மா கோபம் வரும் போது அடிக்கடி எங்களையும் அப்பாவையும் சேர்த்துத் திட்டும் வரிகள் ஞாபகத்துக்கு வருகிறது. “என்னுடைய ராசி, எனக்கு வந்ததும் அப்படி, கடவுள் தந்ததும் அப்படி.” அம்மாவின் வார்த்தைகள் எனக்கும் நன்றாகவே பொருத்துகிறது. அவசரத்துக்குத் தேடினால் என் பிள்ளைகளும் புருஷனும் அகப்படவே மாட்டார்கள்.

டிங் - ரம்யா வாட்ஸ்அப் மெசேஜ் அனுப்பியிருக்கிறாள்.

“அம்மா நான் லைப்ரரியில் படித்துக் கொண்டு இருக்கிறேன். கதைக்க முடியாது. அவசரமென்றால் மெசேஜில் சொல்லுங்கோ.”

ஓம், உனக்கு மெசேஜ் டைப் பண்ணி அனுப்ப எனக்கு வேற வேலை இல்லைத்தானே. நீ வீட்டுக்கு வந்து தெரிஞ்சுகொள்.

இதை யாருக்காவது சொல்லாமல் இருக்க முடியாதே. அக்காவுக்குப் போன் பண்ணிப் பார்க்கலாமோ? இந்த விஷயத்தை அவசரப் பட்டு அவவுக்குச் சொல்லக் கூடாது. சேகர் என்னைக் கொன்றே போடுவான். அவனே இன்னும் எங்களுக்கு கேர்ள் ஃப்ரெண்டை அறிமுகப் படுத்தவில்லை. அக்காவுக்குச் சொன்னால் நாளைக்கு சேகர் வரமுன் வீட்டுக்கு வந்து நிற்பா விடுப்பு பார்க்கிறதுக்கு. நான் சொல்லாமலே என்ர மனுசனுக்கும் பிள்ளைகளுக்கும் விளங்கி விடும் அக்காவின் காதுக்கு விஷயம் எட்டிவிட்டது என்பது. முன் அனுபவப்படி பார்த்தால் வீக்கெண்ட் முழுக்க அர்ச்சனை கிடைக்கும் என் அன்புக் கணவரிடமிருந்தும் என் புத்திர சிகாமணிகளிடமிருந்தும். எனக்கு அது தேவையா?

ஏன் நான் இப்படி மகன் ஒரு பொம்பிளைப் பிள்ளையை வீட்டுக்குக் கொண்டு வருகிறான் என்பதில் இவ்வளவு உற்சாகமாக இருக்கிறேன் என்று நீங்கள் யோசிக்கலாம். என்னுடைய மகனுக்கு வயது 29. அடுத்த மாதம் முப்பதாவது பிறந்த நாள் வருகிறது. சேகர் கெட்டிக்காரன், நல்ல வேலையில் பிரிஸ்டல் எனும் நகரத்தில் இருக்கிறான். எல்லாவற்றிலும் திறமையான என் மகனில் நான் சொல்லும் குறை ஒன்றே ஒன்று தான். இன்னும் கல்யாணம் கட்டவில்லை என்பது தான் என் பிரச்சினை. கடந்த சில வருஷங்களாக எனக்கும் அவனுக்கும் இடையில் நடக்கும் வாக்குவாதம் அவனது கல்யாணம் பற்றியது தான். கல்யாணம் பேச வேண்டாம் என்று ஆணித்தரமாக சொல்லி விட்டான். ‘நான் பழகி எனக்குப் பிடித்த பெண் ஒருத்தியைத் தான் திருமணம் செய்வேன். சும்மா முன்ன பின்ன தெரியாத ஒருத்திக்குத் தாலி கட்ட மாட்டேன். ஆகவே உங்கள் நேரத்தை எனக்குப் பொம்பிளை பார்த்து வீணாக்க வேண்டாம்’ என்று நான் கல்யாணப் பேச்சை முதல் முதலாக அவனிடம் தொடங்கிய போதே தெட்டத் தெளிவாக சொல்லிப் போட்டான்.

இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த பிள்ளை. அவனுக்கு கல்யாணம் பேசுவது என்பது ஒத்து வராது என நானும் என் கணவரும் ஓரளவு எதிர்பார்த்தது தான். தானாக ஒருத்தியைக் காதலிச்சு எங்களிடம் கொண்டு வந்து காட்டினால் முழு சம்மதத்தோடு கல்யாணம் செய்து வைக்க நாங்கள் தயார். பிள்ளையின் சந்தோஷம் தான் எங்களுக்கு முக்கியம். ஆனால் இவன் ஒருத்தியையும் வீட்டுக்குக் கூட்டி வந்து இவள் தான் என் வருங்கால மனைவி என்று காட்டுகிறானில்லையே என்பது தான் எனது தற்போதைய பிரச்சினை.

இந்த விஷயத்தில் ரம்யா ஒரு கரைச்சலும் தரவில்லை. அவள் இப்ப எம்.எஸ்.சி படிக்கிறாள். முடிந்ததும் அடுத்த வருஷம் கல்யாணத்துக்கு நாள் குறித்து ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி விட்டோம். மாப்பிள்ளை இவரோட நண்பனின் மகன் தான். அவர்கள் இருவருக்கும் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படிக்கும் போது காதல் வளர்ந்து விட்டது என்று தெரிந்ததும் நாங்கள் பெற்றோர்கள் கதைத்து முடிவெடுத்து விட்டோம்.

அடிக்கடி என் அக்கா வேறு, சேகருக்கு கல்யாணம் செய்து வைக்கிற நோக்கம் இருக்குதோ? என்று என் வயிற்றெரிச்சலைக் கிண்டுவா. போதாதென்று அம்மாவுக்கும் தூண்டி விட அம்மாவும் அதே கேள்வி. இப்படி நான் படும் பாடு என் மகனுக்கு விளங்கிற தில்லை. இந்த விஷயங்களை சொன்னாலும் அவனிடமிருந்து வரும் பதில்,

“பெரியம்மாவும் அம்மம்மாவும் எனக்கு வரும் பெண்டாட்டியோடு குடும்பம் நடத்தப் போறதில்லை. ஆகவே அவர்களின் வேலையைப் பார்த்துக் கொண்டு இருக்கச் சொல்லுங்கோ.”

நாளைக்கு வருபவளுக்கு ஏதாவது ஸ்பெஷல் லஞ்ச் கொடுக்க வேண்டும். என்ன சமைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்க அப்பாவும் மகளும் கதவைத் திறந்து கொண்டு ஒன்றாக வந்தார்கள்.

“அம்மா போன் பண்ணினீங்க பிறகு ஏன் என்று ஒரு மெசேஜும் ஏன் போடவில்லை?”

“எனக்கும் ஒரு வெறும் வாய்ஸ் மெயில் இருந்தது. நான் ட்ரெயினில் இருக்கும் போது போன் பண்ணியிருக்கிறீர் போல.”

“அவசரமாக நான் போன் பண்ணினால் அப்பாவும் மகளும் பிசி.”

“சரி அம்மா. ‘நான் லைப்ரரியில் இருக்கிறேன், அவசரமென்றால் மெசேஜ் அனுப்புங்கோ’ என்று பதில் போட்டனான் தானே. அப்படி என்ன அவசரம் என்று இப்பவாவது சொல்லுங்கோவன்.”

“உன்ர அண்ணன் நாளைக்கு கேர்ள் ஃப்ரெண்டோட வாறானாம். அதைத் தான் சொல்ல இரண்டு பேருக்கும் போன் எடுத்தனான்.”

“வாவ்! குட் நியூஸ். கேர்ள் ப்ரெண்ட் யாரென்று சொன்னவரோ?”

“அப்படிச் சொல்லவில்லை. என்னுடைய ஃப்ரெண்ட் உமாவோட வருகிறேன். கெஸ்ட் ரூமை ரெடி பண்ணி வையுங்கோ என்று சொன்னவன்.”

“ஃப்ரென்ட் என்று தானே சொன்னவன். அது கேர்ள் ஃப்ரெண்டாக இருக்க வேண்டும் என்று சொல்ல முடியாதே” என் அன்புக் கணவர் வழக்கம் போல நான் தப்பாக ஏதோ சொல்கிறேன் என்பது போலப் பதில் சொன்னார்.

“உங்களுக்கு நான் எது சொன்னாலும் சரியாக இருக்காது தானே. நாளைக்கு வந்த பிறகு பார்ப்பம் யார் சரி என்று.”

“அப்பா சொல்வது நியாயம் தானே அம்மா. நீங்கள் கேர்ள் ஃப்ரென்ட் என்று நினைக்கிறது தப்பாக இருக்கலாம். நீங்கள் நேரடியாகக் கேட்டிருக்கலாமே?”

(16 ஆம் பக்கம் பார்க்க....)

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

# உமா வருகிறாள்

"அவன் அவசரமாகச் சொல்லிப் போட்டு நான் திருப்பி எதுவும் கேட்க விடாமல் போனைக் கட் பண்ணின விதத்தில் எனக்கு வடிவாகத் தெரியும். நாளைக்கு அப்பாவும் மகளும் தெரிஞ்சு கொள்ளத் தானே போறீங்க."

"நான் அண்ணாவுக்கு மெசேஜ் பண்ணிப் பார்க்கிறேன்."

"சும்மா இரடி. நாளைக்கு மத்தியானம் வரும் போது தெரியவரும் தானே. நீ குறுக்கால கேள்வி கேட்டு அவனைக் குழப்ப வேண்டாம். அதை விட்டு விட்டு நாளைக்கு வரப் போகும் உன் வருங்கால அண்ணிக்கு என்ன சமைக்கலாம் என்று அப்பாவும் மகளும் ஏதாவது ஐடியா இருந்தால் சொல்லுங்கோ."

இரவு முழுவதும் எனக்கு வரப்போகும் மருமகள் பற்றிய சிந்தனை தான். ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்கும்? மகனுக்கு ஏற்ற மாதிரி இருப்பாளோ? எங்களோட ஒத்துப் போவாளோ? என்ர பிள்ளை விபரமானவன். பொறுமையாக எல்லாம் நிறைந்தவளாகத் தான் தேடிப் பிடிச்சிருப்பான் என்ற நினைவிலேயே நித்திரை கொண்டேன்.

காலையில் எழுந்ததும் சமையல் ஆரம்பித்து விட்டேன். கோழிக்கறி நண்டுக்கறி மூன்று மரக்கறிகள் என்று ஐந்து கறிகள் வைக்கத் திட்டமிட்டு சமையலை ஆரம்பித்தேன்.

"வருங்கால மருமகளுக்கு மாமியாரின் சமையல் திறன் பற்றி முதல் சந்திப்பிலேயே ஒரு தனி அபிப்பிராயம் வரப்போகிறது ரம்யா."

"ஓமப்பா. எனக்கும் அப்படித்தான் படுகிறது."

"அப்பாவும் மகளும் எனக்கு நக்கலடிச்சது போதும். வந்து உதவி ஏதாவது செய்யுங்கோ." என்று சொல்லி அவர்களின் வாயை மூடினேன். சமையல் விஷயத்தில் குறை சொல்லக் கூடாது, அவர்கள் எப்போதுமே எனக்கு சமையல் செய்யும் போது உதவி செய்பவர்கள் தான்.

எட்டரை மணி போல சேகரிடமிருந்து மெசேஜ் வந்தது.

"லீவிங் நௌ. வில்பி ஹோம் பை 11.30"

சமையல் முடித்து ஷவர் எடுத்து விட்டு என் மருமகளை வரவேற்கத் தயாராகினேன். லண்டனில் வந்து இத்தனை வருஷம் வாழ்ந்தாலும், என்னவோ தெரியவில்லை எங்கள் சமுதாயத்திலிருக்கும் அம்மாமார்களைப் போல் எனக்கும் என் பிள்ளைகள் வயதுக்கு வந்தவுடன் கல்யாணம் செய்து அவர்கள் மூலம் பேரப் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் எனும் ஆசை தான் முன்னுக்கு நிற்கிறது. அநேகமான வெள்ளைக்காரர்கள் இப்படிப் பிள்ளைகளைக் கல்யாணம் பண்ணுங்கோ என்று நச்சரிப்பது இல்லையாம். அவரவர் வாழ்க்கையை அவரவரே தீர்மானிக்க விட்டு விடுவார்களாம். வீணாகப் பிள்ளைகளின் விஷயத்தில் மூக்கை நுழைப்பதில்லையாம் என்று என் மகனும் மகளும் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். நானும் என்னோடு வேலை செய்யும் வெள்ளைக்காரர்களிடம் கதைக்கும் போதும் அப்படித்தான் உணர்ந்திருக்கிறேன். நமக்கு என்னமோ ரத்ததில ஊறிப் போச்சுது போல பிள்ளைகளைக்கு ஒரு நல்ல துணை தேடிக் கொடுக்க வேண்டும் என்கிற அதீத ஆர்வம்.

மகனின் கார் வருவதை ஜன்னல் வழியாகக் கண்டதும் கீழே இறங்கி முன் கதவுக்கு வந்தேன். எனக்குப் பின்னால் அவரும் மகளும். என்ன தான் எனக்கு நக்கல் அடித்தாலும், அவர்களுக்கும் என்னளவு ஆர்வம் இருக்கிறது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். என் பிள்ளை என் வருங்கால மருமகளோடு வந்து இவர்கள் இரண்டு பேரின் வாயை அடைக்கப் போகும் சந்தர்ப்பம் இதோ வருகிறது என நினைத்த படி கதவைத் திறந்தேன்.

ஒரு நாற்பது, நாற்பத்தைந்து வயதிருக்கக் கூடிய ஒருத்தன் ஒரு சிறு முதுகில் தொங்கும் பையோடு நின்றான். சேகர் காரை ரிமோட்டால் லொக் பண்ணிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். எட்டிப் பார்த்தேன் ஒரு பெண் பிள்ளையும் என் கண்ணில் தென்படவில்லை.

"குட் மோர்னிங் சார். குட்மோர்னிங் மேடம்." என்று அவன் சொன்ன விதத்தில் அவன் ஒரு இந்தியத் தமிழன் என்று தெளிவாகத் தெரிந்தது. நாங்களும் பதிலுக்கு குட்மோர்னிங் சொல்லி அவர் உள்ளே வர வழி விட்டோம்.

"சேகர் உள்ளே வந்தான்.

"இவர் தான் என்னுடைய ஃப்ரென்ட் உமா சங்கர். உமா என்று சுருக்கமாகக் கூப்பிடுவோம். இவர் என்னுடைய கம்பெனியின் சென்னை பிராஞ்சில் வேலை செய்கிறார். ஒரு புரொஜக்டுக்காக ஒரு வருஷம் இங்கு வந்திருக்கிறார். அவரோட ஃபாமிலி அடுத்த மாதம் வருவாங்க. இந்த வீக்கெண்ட் நான் இங்கு வருவதால் லண்டன் சுற்றிக் காட்டுகிறேன் என்று கூட்டி கொண்டுவந்தேன்."

சேகர் சொன்னதைக் கேட்டு என் மகளால் சிரிப்பை அடக்க முடியாமல் சிரிக்க அவளோடு என் கணவரும் சேர்ந்து சிரிக்கத் தொடங்கினார். சேகரும் உமாவும் ஒன்றும் புரியாமல் ஆச்சரியத்தோடு எங்கள் மூவரையும் பார்த்தார்கள். ■

# இரகுநாத குமாரதாஸ மாப்பாண முதலியார்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

உரிய கடப்பாடு கள் ஒழுங்குகள் விதிக்கப்பட்டு முருகனையே பிரதானமாக்கி அவருக்கான வழிபாடுகளையே முதன்மைப்படுத்தி அந்த பக்திப்பிரவாகம் எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனைவரையும் சென்று சேரவைத்த நல்லூரான் எப்போதும் உறுதிப்படுத்தியே வந்துள்ளது.

ஆரம்ப காலங்களில் இருந்த முக்கிய பிரமுகர்களுக்கான செங்கம்பள வரவேற்புகள் கூட பிற்காலங்களில் நிறுத்தப்பட்டது. ஒருமுறை அப்போதைய பிரதமரான டட்லி சேனநாயக்கா மற்றும் ஜீ. ஜீ. பொன்னம்பலம் வருகையின் போதே இவையாவும் நிறுத்தப்பட்டு ஆலய வளாகத்தில் அதுவும் முருகன் சந்நிதானத்தில் அனைவரும் சமம் எனும் புரட்சிகர நடைமுறை பேணப்பட்டு அது இன்றுவைர அப்பழுக்கற்று குமாரதாஸ மாப்பாண முதலியாரால் நிறைவேற்றப்பட்டுவந்திருக்கின்றது.

அன்பு, பக்தியுடன் ஆலயத்திற்கு வருபவர்களுக்கு எதுவும் இறை வழிபாட்டுக்கு தடையாக இருக்கக்கூடாது என்பதில் ஆலய நிர்வாகியான குமாரதாஸ் மாப்பாணமுதலியார் மிகத் தெளிிவாக இருந்தார்.

உலகில் எந்த ஆலயத்திலும் இல்லாத தனித்துவ நடைமுறைகள் நல்லூரில் இருப்பது பெருமை தரும் விடயமாகும்.

ஒரு ரூபாய்க்கு அர்ச்சைனச்சீட்டு முதல் குறைந்த கட்டணத்திலேயே உருத்திரா அபிஷேகம் மற்றும் ஷண்முக அர்ச்சைனகள் என்பன உட்பட அனைத்து உபயங்களும் இன்றளவும் ஏசமான் ஐயாவினுடைய தலைமைத்தவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளது.

ஆலயத்தை நன்கு அவதானிப்பவர்களுக்கு நல்லூரில் இடம்பெறும் வளர்ச்சியான மாற்றங்கள் அனைத்தும் ஆலய பக்திப் பாரம்பரியத்தை இன்னும் அதிகரிக்கேவ அன்றி வேறில்லை என்பது புரியும். மற்றும் இவருடைய காலத்தில் ஆரம்பத்தில் கேணிக்கு இடையில் இருந்த பொழுது போக்குவரத்து வீதி அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்ததனாவிடம் அனுமதிவேண்டி ஆலயத்துடன் இணக்கப்பட்டு ஆலய வளாகம் விஸ்தரிக்கப்பட்டு வெளி வீதியை போக்குவரத்துக்குரியதாக மாற்றப்பட்டது.

ஆலய வளாகத்தில் இருந்த வணிக இடங்கள் எல்லாம் 1980 களில் அகற்றப்பட்டு அவற்றுக்கான தனியிடம் வெளிளிப்பகுதியில் ஒதுக்கப்பட்டது. வீதிமுழுதும் வெள்ளை மணல் பரப்பப்பட்டு ஆலய வளாகம் விஸ்தாரமாகவும் தூய்மையாகவும் பேணப்படுகின்றது.

உண்மையில் நல்லூரான் ஆலயம் ஒரு மடாலயமாக இருந்தாலும் காலப்போக்க்கில் சிவாகம மரபுகைளயும், குமாரதந்திர மரபுகைளயும் தேவைக்கு ஏற்ப அளவில் தன்னுள் கொண்டு ஆறுகால பூஜை நியமங்கைளயும் 25 நாள் மேஹாற்சவ பண்பியைலயும் கொண்டுள்ளமை சிறப்பானதாகும்.

இத்தகைய பெரும் வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆலயத்தின் குமாரதாஸ மாப்பாண முதலியார் என்றால் அது நிகரில்லை. அவரது மறைவு இந்துக்களுக்கு ஒரு பாரிய இழப்பு.

# அமைதியுடன் அடங்கும் இரவுகள்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

எதிரே ரியூட்டரி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருப்பதை தெரிந்து கொண்டபோது, வியப்பாகத்தானிருந்தது.

யாழ்ப்பாணத்தில் புதிதாக நாம் பார்க்கும் மற்றொன்று, விடுதலைப் புலிகளின் பல்வேறு துறைப் பணியகங்கள். பல்வேறு இடங்களிலும் பெரிய, அழகான பெயர்ப் பலகைகளுடன் இவை காணப்படுகின்றன. வசதியான பெரும் தனியார் இல்லங்களை இப்படி பணியகங்களாக மாற்றியுள்ளனர். இவ்வில்லங்களின் சொந்தக்காரர்கள் அநேகமாக கொழும்புக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ குடிபெயர்ந்துவிட்டவர்கள். 'புலிகளின் குரல் வானொலி நிலையம்' , 'ஈழநாதம்' பத்திரிகை அலுவலகம் போன்றனவும் இப்படி தனியார் இல்லங்களிலேயே அமைந்துள்ளன. இதுதவிர, இயக்கப் பொறுப்பாளர்களுக்கும் மாவீரர், போராளிகளின் குடும்பத்தவர்களுக்கும் இப்படி வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு, இடம்பெயர்ந்த அல்லது வீடற்ற பொது மக்களுக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

புகையிரத நிலையங்கள், பொதுக் கட்டடங்களிலும் பலவற்றில் ஏராளமான அகதிக் குடும்பங்கள் வாழ்கின்றன. பல இடங்களில் குடிசைகள் அமைத்தும் இவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

புயையிரதப் பாதை இருந்த இடத்தில் தண்டவாளங்களையோ, சிலிப்பர் கட்டைகளையோ அல்லது கற்களையோ காணவில்லை. புல், செடிகளோடு ஆங்காங்கே சிற்சில குடிசைகளும் அவ்விடத்தில் முளைத்துக் காணப்படுகின்றன.

நகரின் பிரதான வீதிகளில் கண்ணைக் கவரும் மற்றொன்று, மின்சாரக் கம்பங்களில் இணைக்கப்பட்டுள்ள விளக்குகள். கண்ணாடிக் கூண்டுகளுள் இந்த மேசை விளக்குகள் இரவு நேர 'கலங்கரை விளக்கங்கள்'. மாநகர சபை அமைத்துள்ள இவ் விளக்குகள், குண்டும் குழிகளுமான வீதிகளில் இரவில் சுமார் 9, 10 மணிவரை வழிகாட்டுகின்றன.

பொழுதுபோக்கு அம்சங்கள் அருமை. இந்திய சினிமாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோது, புலிகள் தயாரித்த சினிமாப் படங்கள் அங்கு திரையிடப்படுகின்றன. யாழ் நகரில் ஸ்ரீதர், சுன்னாகம் நாகம்ஸ், பருத்தித்துறை தெய்வேந்திரா ஆகிய படமாளிகைகளில் இவை திரையிடப்படுகின்றன. நான் நின்றசமயம் 'உயிர்ப்பூ'வுடன் Jurassic Park திரைப்படமும் திரையிடப்பட்டுக் கொண்டிருந்தது.

நகர் பொதுவாக மாலை ஏழு, எட்டு மணிக்கெல்லாம் அடங்கிவிடுகிறது. மின்சாரமின்மை இதற்கான முக்கிய காரணம். பொருளாதார தடை ஓரளவு நீக்கப்பட்டிருந்த அந் நாள்களில், எங்காவது சில வீடுகளில் 'ஜெனரேட்டர்' மின் வெளிச்சம் தெரியும். இயக்க முக்கியஸ்தர் வீடுகளுக்கும் புலிகளின் மின்சாரம் வழங்கப்படுகிறது. அம் மின்சாரம் கிடைக்கக்கூடிய இடங்களில் பொது மக்களும் விரும்பினால் அதனைப் பெறலாம். ஆனால், பொதுவில் அது கட்டுபடியாகக்கூடியது அல்ல. ஆக, இந் நிலையில் அங்கு இரவு நேர ஆபத்தாந்தவனாக திகழும் ஒரு புதிய கண்டுபிடிப்பு 'ஜாம் போத்தல் விளக்கு'. ஜாம் போத்தலின் அடியில் சிறிதளவு எண்ணெயில் அது சுடர் விட்டுக்கொண்டிருக்கும். காற்றினிலும் மழையினிலும் கலங்க வைக்கும் இடியினிலும் அதுதான் ஒளி.

இரவு நேர வைபவங்களாக கோவில்களில் மின் விளக்குகளுடன் திருவிழாக்கள் நிகழும் அல்லது விடுதலைப் புலிகளின் கூட்டங்கள் நிகழும். பெரும்பாலும் கோவில்கள் இங்கு சிறப்புற்றுக் காணப்படுகின்றன. வீதியோரத்து வயிரவர் கோவில்களும் புனர்நிர்மாணிக்கப்பட்டு, திருவிழாக்களும் நடைபெறுகின்றன. வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் 'நேர்த்திக் கடன்கள்' என்கிறார்கள். அத்தோடு, இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் சில கோவில் திருவிழாக்களும் இங்குள்ள கோவில்களில் நடைபெறுகின்றன. அப்படி, நயினாதீவு நாகபூஷணி அம்மன் திருவிழா, திருநெல்வேலி அம்மன் கோவிலில் நடைபெறுவதாக கூறினார்கள். இந்த கோவில் திருவிழா நிகழ்ச்சிகளும், புலிகளின் கூட்ட நிகழ்ச்சிகளும் இரவு நேர நிசப்தத்தில் ஒலிபெருக்கிகளில் பெருமளவு தூரம் கேட்கின்றன. இது தவிர, 'புலிகளின் குரல்' வானொலி இரவு 10 மணிவரை ஒலிபரப்பாகிறது.

இரவு அப்படியே அடங்குகிறது. ஆம் அது உறுதிப்படுத்தப்பட்ட ஒரு மோதல் தவிர்ப்பு காலம். இந்த அமைதியைக் குலைத்து, எத்தனை இரவுகள் அவர்கள் பேரிடிகளையும், கோரங்களையும் கண்டிருப்பார்கள்.

சரி இனியும்தான் அந்த ஏக்கமான இரவுகள் அவர்களை அணுகவே மாட்டாவா?

யாருக்குத் தெரியும், திக்குத் தெரியாத காட்டில் ... என்று எண்ணிக்கொண்டிருந்தபோதே, அவர்களை அந்த இரவுகள் மீண்டும் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டன.

(அடுத்த வாரம்)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

08. 

1. இது அந்திமாலை நேரம்
2. இது அதிகாலை நேரம்
3. இது நண்பகல் நேரம்

வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

09. கப்பல் - கடல் எனின், விமானம் - ....................................................................... ஆகும்.

1. விமான நிலையம் 2. ஆகாயம் 3. தரை

10.  ....................................... ஆகும்.



பின்வரும் பாடலைக் கொண்டு 11 ஆம், 12 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே!
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!
வீம்பாய் கத்திக் கொட்டிடுமே!
விரோதி கண்ணில் பட்டிடுமே!

11. வீம்பாய் கத்தும் பிராணி எது?

1. பாம்பு 2. தவளை 3. சிங்கம்

12. பாடலில் விரோதி எனப்படும் பிராணி எது?

1. பாம்பு 2. தவளை 3. பல்லி

13. பாக்கு ⟶ குருவி விறகு ⟶ .........?..................

14. தென்னை - ஈர்க்கில் எனின், மூங்கில் ....................................

1. பிரம்பு 2. பலகை 3. கூரை

15. கோலத்தில் வெற்றுக் கூட்டில் வரவேண்டிய விடையின் கீழ்க் கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 22 | 32 | 42 | .... |

1. 72 2. 52 3. 62

16.

| | | | | |
|---|---|---|---|---|
| 81 | 64 | 49 | 36 | .... |

1. 25 2. 16 3. 9

17. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது

1. திருக்குறள் 2. பழமொழி 3. மரபுத்தொடர்

18. ஆசிரியர் தொடர்பாகக் கூறக் கூடிய ஒன்றாக அமைவது

1. அன்பானவர் 2. கோபமானவர் 3. கற்றுத் தருபவர்

19. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்

1. கலாநிதி .சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
2. ஆனந்த சமரக்கோன்
3. கலாநிதி ஆனந்த சமரக்கோன்

20. தொற்று நோய் பரவும் போது உடனடியாக யாருக்கு அறிவிக்க வேண்டும்.

1. மருத்துவ மனையின் மருத்துவ அலகுக்கு
2. பொதுச் சுகாதார பரிசோதருக்கு
3. பாடசாலை அதிபருக்கு

21. A இன் தந்தை B இன் மகனெனின் A ஆனவர் B இற்கு என்ன உறவு முறை.

1. மகன் 2. பாட்டன் 3. பேரன்

22. மரங்களைச் செதுக்கப் பயன்படுத்தத்தக்க மிக உகந்த உபகரணம்

1. துறப்பணம் 2. உளி 3. சீவுளி

# ஆசிரியர்களைச் சமூகத்துக்கு எதிராகத் திசை திருப்பும் அரசு

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக். 10**

**"200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளைத் திறக்க அரசு தீர்மானித்துள்ளமை முற்றுமுழுதாக ஆசிரியர் சங்கங்களை சமூகத்துக்கு எதிராகத் திசை திருப்பும் திட்டமே."**

**- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் பாராளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் சங்கங்களின் போராட்டம் மிகப்பெரிய நெருக்கடியை நாட்டில் ஏற்படுத்தியுள்ள நிலையில் அதனைத் தீர்க்க அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காதுள்ளது.

காலையில் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. சபையில் இந்த விடயம் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு அரச தரப்பினர், நவம்பரில் முன்வைக்கவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான தீர்வுகளை வழங்குவதாகக் கூறியுள்ளனர்.

தீர்வுகளை வழங்குவதென்றால் நவம்பர் வரையில் கால அவசகாசம் வழங்குவத எதற்கு? ஆசிரியர் சங்கங்களை அழைத்து இப்போதே அதற்கான வாக்குறுதியை வழங்கி நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்,

ஆசிரியர் சங்கங்கள் சுபோதினி அறிக்கையை நடைமுறைப்படுத்தவே கூறுகின்றனர், அதேபோல் 2018ஆம் ஆண்டு முன்னைய அரசு முன்வைத்த யோசனையை அரசு நான்கு கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதாகக் கூறுவதில் நியாயம் இல்லை.

அதுமட்டுமல்ல, ஆசிரியர் சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளைத் திறக்க அரசு தீர்மானித்துள்ளது. இது முற்று முழுதாக ஆசிரியர் சங்கங்களை சமூகத்துக்கு எதிராகத் திசை திருப்பும் நோக்கமேயாகும்.

பல்வேறு அபிவிருத்தி வேலைதிட்டங்களுக்காகப் பல மில்லியன் ரூபாக்களை அரசு ஒதுக்குகின்ற நிலையில், பல மில்லியன் ரூபா கறுப்புப்பணம் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையைச் செவிமடுக்காது அரசு செயற்படுவது முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றது.

கடந்த 2018ஆம் ஆண்டு முன்னைய அரசு ஆரிசியர் பிரச்சினைகள் குறித்து முன்வைத்த யோசனைகளை ஏற்றுக்கொள்வதாக ஆரிசியர் சங்கங்கள் கூறியுள்ளன. ஆகவே, அரசு இந்த விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்"

- என்றார். (இ)

**வேலையாள்கள் தேவை**

- றொட்டி போடுபவர்
- சமையலாளர் (ஆண், பெண்)
- சாப்பாடு பரிமாறுபவர்
- ஓட்டோ சாரதி

ஆண்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 077 766 0776**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 28 - 12 - 1948

உதிர்வு 18 - 09 - 2021

### Dr செல்வத்துரை குருபாதம்

Multipotentialite, Paralegal, எழுத்தாளர், ஆய்வாளர்,
யாழ். ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியர், நூலகர்

**பிறந்தவர் மரிப்பது இயற்கை**
**எனினும் உங்கள் இழப்பை**
**எங்களால் ஏற்கமுடியவில்லையே**
**அன்பான உங்கள் முகத்தை**
**ஆண்டவன் தன்னோடு எடுத்துவிட**
**நாம் இங்கு துடியாய் துடிக்கின்றோம்**
**என்றும் உம் நினைவுகள்**
**எம்மோடு நிலைத்திருக்கும்**

தொடர்புகளுக்கு:
**ஜெயா - மனைவி**
**Mobile : +14163987241**
**செல்வசோதி செல்வத்துரை - சகோதரன்**
**Mobile : +14372978385**
**குணே பரம்சோதி - மைத்துனர்**
**Mobile : +15196353938**
**பிறேம் பரம்சோதி - மைத்துனர்**
**Mobile : +16476464212**

தகவல்:
**குடும்பத்தினர்**

அந்தியேட்டி நிகழ்வு எதிர்வரும் 18.10.2021 திங்கட்கிழமை நடைபெறும்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**மலர்வு - 02.05.1957**
**உதிர்வு - 10.09.2021**

கடந்த 10.09.2021 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஆறுமுகம் சிறிதரன் JP** (வாழைச்சேனை — ஏழாலை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.10.2021 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று 10.10.2021 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவகுரு வீதி,**
**ஏழாலை மத்தி, ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 28 - 07 - 1927

உதிர்வு 16 - 09 - 2021

### திருமதி
### இளையதம்பி தனலட்சுமி அம்மா
**(பாக்கியம்)**

எம் இனிய அம்மாவே
நீங்கள் செய்த தியாகங்கள் தான் எத்தனை
எமக்காக மெழுகுவர்த்தியாய் உருகினீர்கள்
நீங்கள் மறைந்தது ஒரு கனவுபோல் உள்ளதே
நீங்கள் மறைந்தாலும் எம்மோடு
எப்போதும் வாழ்வீர்கள்
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*அந்தியேட்டி நிகழ்வு எதிர்வரும் 16.10.2021 சனிக்கிழமை நடைபெறும்.*

தொடர்புகளுக்கு :
**கங்காதரன் (மகன்)**
**00447424159464**

தகவல் :
**குடும்பத்தினர்.**

ஈழநாடு



## சட்ட திருத்தத்தின்...

நேற்று வவுனியாவில் ஊடகவியலாளர்கள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் முறை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்றைய தினம்(நேற்று முன் தினம்) பாராளுமன்ற தெரிவுக்குழு தேர்தல் முறை மறுசீரமைப்பு பற்றிய கூட்டம் நடைபெற்றது.

இந்த தெரிவுக்குழுவுக்கு தற்போது புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு அவர் வருகை தந்திருந்தார். இந்த குழு சந்திக்க ஆரம்பித்ததிலிருந்து மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதனை நாங்கள் சிலர் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

அதை நகர்த்துவதில் உள்ள சட்ட சிக்கல்கள் சம்பந்தமாக ஒவ்வொரு தடவையும் பிரஸ்தாபிக்கப்படும்.

ஆனாலும் ஒரு சிறிய சட்ட திருத்தத்தின் மூலமாக முன்னர் இருந்த தேர்தல் முறையையே பின்பற்றி தேர்தல் நடத்த முடியும் என்ற கருத்தை நான் வெளிப்படுத்தியிருந்தேன்.

அதற்கான ஒரு சட்ட மூலமும் 2019 ஆம் ஆண்டு நான் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தேன். அதன் அடிப்படையில் இது செய்யப்படலாம் என்ற கருத்து கூறியபோது சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டது. இறுதியாக சட்டமா அதிபரும் அந்த முறையிலும் செய்யலாம் என்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த பின்னணியிலே தான் நேற்றைய தினம்(நேற்று முன் தினம்) கூட்டத்துக்கு வந்திருந்த பஸில் ராஜபக்ஷ வெகு விரைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்று அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாக அறிவித்தார்.

தங்களுக்கும் மாகாண சபை தேர்தல் நடத்தவேண்டும் என்ற தேவையும் அழுத்தங்களும் இருப்பதாக அவர் கூறினார். இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வந்து சென்றதன் பின்னர் இதை கூறியுள்ளார்.

இது எப்படியாக இருந்தாலும் மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்பது எங்கள் நிலைப்பாடாக தொடர்ச்சியாக இருந்து வந்துகொண்டிருக்கின்றது.

ஆகையினால் எனது சட்டமூலத்தை உபயோகித்து ஒரு சட்ட திருத்தத்தை உடனடியாக செய்து மாகாண சபை தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

நான் தயாரித்திருந்த சட்ட மூலத்தை தற்போது பொதுஜன பெரமுன செயலாளரிடம் கொடுத்திருக்கின்றேன்.

அமைச்சரவை இது குறித்து ஆலோசித்து ஒரு முடிவெடுத்து அப்படி செய்வதாக இருந்தால் வரும் நாள்களிலே அதனை வர்த்தமானியில் பிரசுரித்து ஒரு அரசாங்க வரைவாக-சட்டமூலமாக அதனை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்-என்றார்.

## அரசின் மீது நாட்டு...

பெரமுன தலைமையிலான அரசுக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான விரிசல் நிலை வலுத்து வரும் நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டங்களின்போது தான் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் தவறான முறையில் சித்தரிக்கப்பட்டு வெளியாவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்ட அமைச்சர் விமல் வீரவன்ஸ, இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆட்சி பீடத்தை வழங்கினார்கள். ஆனால் மக்களின் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்பதை விட எதிர்பார்க்காத பல்வேறு விடயங்களை அரசாங்கம் செய்ய முயன்றதன் காரணமாகவே இன்று அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர்.

நாட்டுக்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைச்சரவைக் கூட்டத்தின்போதுகூட யோசனையொன்று முன்வைக்கப்பட்டு ஒரே நாளில் நிறைவேற்றப்படுகிறது. ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டு அதனூடாக தீர்மானங்களை மேற்கொள்வதே நாட்டின் நிலையான கொள்கையை வலுப்படுத்தும்-என்று கூறியுள்ளார். (அ)

## சிங்கம் நரியாகி...

என்று அமைச்சர் சி.பி. ரத்னாயக்க விமர்சித்துள்ளார்.

நுவரெலியா, கொத்மலை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு விமர்சித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்டார். இவர்களின் ஆதரவு இருந்ததால் அன்று சிங்கம்போல சரத் பொன்சேகா யுத்தத்தை முடித்தார். ஆனால் பாராளுமன்றம் வந்த பிறகு நரிபோல் செயற்படுகின்றார். பாரம்பரிய வைத்திய முறைமையை கொச்சைப்படுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். நாம் பாரம்பரிய வைத்திய முறைமையை மதிக்கவேண்டும்.

அன்று நாம் உர மானியம் வழங்கினோம். ஏன் அவ்வாறு செய்தோம்? விவசாயிகள், விவசாயத்தில் ஈடுபடுவது குறைந்தது. விவசாயிகளின் பிள்ளைகள் தொழிற்சாலைகளுக்குச்சென்றனர். இதனால் அரிசியைக்கூட இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, விவசாயத்தை பாதுகாப்பதற்காகவே அந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதேவேளை, பால்மா, சிமெந்து உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கப்படும். அடுத்த வாரத்துக்குள் நிலைமை வழமைக்கு திரும்பும்-என்றார்.

## நல்லூர்...

10 மணிக்கு அவரது நல்லூர் இல்லத்தில் அமைதியான முறையில் இடம்பெறவுள்ளது என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்

1929ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி பிறந்த அவர் தனது 92ஆவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

1964ஆம் ஆண்டு டிசம்பர் மதம் 15ஆம் திகதி முதல் இன்று வரை நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக அவர் சேவையாற்றினார்.

இறைத் தொண்டாக அரும்பணியாற்றிய பெரும் ஆளுமை எம்மை விட்டு இறையடி சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ - 03)

## 5 வயது மகளுக்கு...

இந்தக் காரணத்தால் தாயார் பெற்ற மகளுக்கு வாய்ப் பகுதியில் நெருப்பால் சுட்டுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த சிறுமியின் பேரன் அக்கராயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த தகவலுக்கமைய தாயார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தை தொழிலுக்குச் சென்ற வேளை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

# கொரோனா நாளாந்த மரணம் மேலும் சரிவு

## இறுதியாக 29 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 10

நாட்டில் மேலும் 29 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நாட்டில் இதுவரை 13 ஆயிரத்து 296 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 29 மரணங்களில் 18 ஆண்களும், 11 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 4 ஆண்கள், 2 பெண்கள் என 6 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 23 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 14 ஆண்களும், 9 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## ஒப்பற்ற...

பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கந்தப் பெருமானின் அறங்காவலராக கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணி ஆற்றிய பெருமகன் ஸ்ரீமான் குமாரதாஸ மாப்பாண முதலியாரின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகின்றேன்.

எவ்வித ஆடம்பரமும் இன்றி பக்தரோடு பக்தராக நின்று ஆலயத்தைக் கட்டி வளர்த்த பெருந்தகையை இனி எங்கே காண்போம்.

தனது சகோதரன் அமரர் சண்முகதாஸ மாப்பாண முதலியார் காலமான நாள் முதல் தனது உத்தியோகப் பதவி யாவற்றையும் துறந்து முழுநேரத் தொண்டராகத் தனது வாழ்வை அர்ப்பணித்த பெருமகன்.

எவருக்கும் அஞ்சாத தன்மகத்துவம் மிக்க ஆளுமையால் பல்வேறு திருப்பணிகளை நிறைவேற்றிய பெருந்தகையின் சாதனைகளை சொல்லி முடிக்க முடியாது.

நல்லூர் ஆலய ஒழுங்குகளை எவர் வருகைக்காகவும் மாற்றி அமையாது தெய்வச் சந்நிதிதானத்தில் அனைவரும் ஒன்றே என்ற அற்புதக் குறிக்கோளை தனது இறுதி மூச்சுவரை காப்பாற்றியவர்.

கண்ணை இமை காப்பது போல் ஒவ்வொரு விநாடியும் ஆலய ஒழுங்குகளை அவதானித்து அரிய பணி ஆற்றிய இப்பெருந்தகையை நல்லூர்க் கந்தப்பெருமான் தனது திருவடிக்கு அழைத்துவிட்டார்.

என் செய்வோம், அவது தூயபணியை நல்லூர் மரபுப்படி இளைய எஜமானார் தந்தையின் வழியில் நெறிப்படுத்தப் பிராத்திப்போம்.

எல்லாக் கோயில்களிலும் நல்லூர் கந்தனின் சிறப்பைப் பின்பற்ற வைத்த ஒப்பற்ற தலைமகனை அனைவரும் மீள நினைந்து பிரார்த்தித்து வழி அனுப்பி வைப்போம்" - என்றுள்ளது. (இ - 03)

## நேற்று 726...

வர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 663 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 447 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 79 ஆயிரத்து 629 ஆக அதிகரித்துள்ளது.

## கோப்பாய்...

இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடப்பட்ட நகைகளும் கைப்பற்றப்பட்டன.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் நண்பகல் வீடொன்றில் 10 தங்கப் பவுண் நகைகள் திருட்டுப்போனதாக பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை முறைப்பாடு செய்யப்பட்டது.

வீட்டிலிருந்தவர் குளியலறையில் இருந்த வேளை இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பிரதம பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று மாலை திருட்டு நகைகளை விற்பனை செய்யும் நோக்குடன் யாழ். நகரில் நடமாடிய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் கைப்பற்றப்பட்ட நகைகள் நேற்று முன்தினம் திருட்டுடன் தொடர்புடையவை என முறைப்பாட்டின் அடிப்படையில் கண்டறியப்பட்டன.

சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

# ஆசிரியரும் அதன் மகத்துவமும்

"சித்திரமும் கை பழக்கம் செந்தமிழும் நா பழக்கம்" என்ற ஆன்றோரின் வாக்கிற்கு அமைவாக மாணவ செல்வங்களுக்கு இடைவிடாது பயிற்சி அளித்து அவர்களுக்கு வழிகாட்டும் திசை காட்டியாக கல்வியோடு சேர்ந்து சிறந்த ஒழுக்கத்தையும் கற்பிப்பவர்கள் ஆசிரியர்கள்.

மாணவர்களை செவினித் தாயாக இருந்து சிறந்த வழிகாட்டுதலின் கீழ் அவர்களை நற்பிரஜைகளாக செதுக்கி தருகின்ற சிற்பிகளாக எமது ஆசிரியர் சமூகம் சேவையாற்றி வருகின்றனர்.

இவர்களின் இவ் உன்னதமான சேவை போற்றுதலுக்குரியதாகும். தன்னை ஓர் குடியரசு தலைவர் என்று கூறுவதை விட சிறந்த ஆசிரியர் என்று கூறுவதில் பெருமை அடையும் டாக்டர் இராதாகிருஸ்ணன் சிறந்த ஆசிரியராக தன்னுடைய சேவையை செய்துள்ளார்.

இவரைப் போன்றே ஒவ்வொரு ஆசிரியரும் தனது மாணவரின் எதிர்கால வாழ்க்கைக்காக பெரிதும் பாடுபட்டு உழைக்கின்றார்கள். அவர்களின் இவ் உன்னத சேவையை பாராட்டும்வகையில்ஒக்டோபர்06ஆம்திகதி ஆசிரியர்தினம்கொண்டாடப்படுகின்றது.

"ஆசிரியரின் மனநிலையே அன்றைய வகுப்பறையின் காலநிலை" காலநிலை மாறினாலும் ஆசிரியரின் மனநிலை மாணவர்களுக்கு கல்வி அறிவை ஊட்டுவதில் மட்டுமே. அந்த வகையில் சமூகத்தை திறம்பட வளர்ப்பதற்கு பாரிய பங்கேற்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் இனிய ஆசிரியர் தின வாழ்த்துக்கள்.

**இளங்கீரன் தனுஜன்,**
**கிழக்கு பல்கலைக்கழகம்.**

ஈழநாடு
Eelanadu




# மாப்பாண முதலியாரின் மறைவு தமிழர்களுக்குப் பாரிய இழப்பு!

## யாழ். மேயர் மணிவண்ணன் இரங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 10

**யாழ். நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி இரகுநாத குமார தாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பானது தமிழர்களாகிய எமக்குப் பாரிய இழப்பு என்று யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

*அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-*

*“அவரது இறுதிக் காலத்தில் அவரோடு பழகும் வாய்ப்பும் அவரிடம் ஆசீர்வாதம் பெறும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.*

*மிகச்சிறந்த பண்பாளன் எல்லாவற்றுக்கும் மேலாக ஆடம்பரமோ பந்தாவோ அற்ற எளிமையின் வடிவமான மிகச்சிறந்த மனிதன் மிகச்சிறந்த நிர்வாகி அவர்.*

*அவர் எம்மைப் விட்டு பிரிந்தபோதும் அவருக்கு நிகரான அல்லது ஒருபடி மேலான தனது புதல்வனை எமக்குத் தந்திருக்கின்றார்.*

*இன்று யாழ். மாநகர சபை தற்காலிகமாக இயங்குகின்ற இடம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு உரித்தான இடம். போரினால் நகரில் இருந்த மாநகர சபைக் கட்டடம் இடிந்து அழிந்தபோது அதனைத் தற்காலிகமாக இயக்க ஓர் இடம் தேவைப்பட்டது. அந்த இடத்தை இலவசமாக மாநகர சபைக்குத் தந்துதவியவர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரே ஆவார்.*

*யாழ். நகரில் தற்போது மிகக் கம்பீரமாக கட்டி எழுப்பப்பட்டுவரும் மாநகர சபைக்கான நகர மண்டப கட்டடத் தொகுதி இலங்கையின் மிகச்சிறந்த கட்டட கலை வல்லுநர்களில் ஒருவரான இவரது புதல்வனின் வடிவமைப்பிலேயே அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.*

*இந்திய அரசால் கட்டி முடிக்கப்பட்டு மாநகர சபையிடம் கையளிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தின் வடிவம் தொடர்பில் கட்டட கலை நிபுணர்களிடையே ஒரு போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியாளர்களுக்கு மத்தியில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் நடுவர்களுள் ஒருவராகவும் இவரது புதல்வன் செயற்பட்டார்.*

*யாழ். மாநகர சபைக்கும் நல்லூர் உற்சவ காலத்துக்குமான தொடர்பு விபரிக்க வேண்டிய ஒன்றல்ல.*

*அந்தவகையில் மாநகர சபைக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கும் அதன் நிர்வாகிகளுக்குமான பந்தம் நீண்டது ஆழமானது.*

*அந்தவகையில் அவரது இழப்பு தமிழர்களாகிய எமக்குப் பாரிய இழப்பு. அவரது பிரிவால் துயர் உற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், பக்தர்கள் அனைவருக்கும் எனதும் மாநகர சபையினதும் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நல்லூர் கந்தனை வேண்டுகின்றேன்” - என்றுள்ளது.* (இ - 03)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 17 - 03 - 1943 |  | 08 - 10 - 2021 |

## தம்பிஜயா நந்தகுமார்

யாழ். புங்குடுதீவு 9 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் St.Gallen -Gossau ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா நந்தகுமார் அவர்கள் கடந்த (08.10.2021) வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா – நல்லம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜேஷ்வரி (ஈஸ்வரி) அவர்களின் அன்புக் கணவரும், பிரபாகரன் (சுவிஸ்), கிருஜா (சுவிஸ்), யசோதா (சுவிஸ்), தர்சினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிமலர் (சுவிஸ்), ரவி (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்), சசிகரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீதம் (கனடா), காலஞ்சென்ற லெட்சுமணன், யோகலெட்சுமி (கனடா), யோகேஸ்வரி(கனடா), செல்வராணி (ஐக்கிய அமெரிக்கா), ஞானமலர்(கனடா), சிவகுமார் (டென்மார்க்), தவகுமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற கந்தையா, பிரேமா (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (கனடா), பேரின்பநாதன் (கனடா), றொபின்சன்(ஐக்கிய அமெரிக்கா), பரமேஸ்வரன்(கனடா), மஞ்சுளா(டென்மார்க்), காலஞ்சென்ற தவமணி, பாலாம்பிகை (இலங்கை), காலஞ்சென்ற யோகாம்பிகை, சந்திரலேகா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், சுப்ரமணியம், வினாயகமூர்த்தி மற்றும் சத்தியசீலன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகலனும்,பிரித்திகா, பிரவீணா, பிரணவி, காயத்திரி, கிசோத், கார்த்திகன், கீர்த்திகன், ஆதீஸ், அஜானி, காருசன், கபிசன், சுபிட்சா ஆகியோரின் பாச மிகு தாத்தாவும் ஆவார்.

பார்வைக்கு:
Saturday, 09 Oct 2021 2:00 PM - 6:00 PM
Sunday, 10 Oct 2021 2:00 PM - 6:00 PM
Friedhof Hofegg Friedhofstrasse 15, 9200 Gossau, Switzerland

கிரியை:
Wednesday, 13 Oct 2021 8:00 AM - 10:00 AM
Friedhof Feldli Feldlistrasse 18, 9000 St. Gallen, Switzerland

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**பிரபா - மகன்**
**Mobile : +41787725972**

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 13 - 05 - 1932 |  | 06 - 10 - 2021 |

## பொன்னுத்துரை சத்தியமூர்த்தி

*(ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரி - விற்பனை திணைக்களம், இலங்கை)*

யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை, கொழும்பு, இந்தியா சென்னை, கனடா Brampton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சத்தியமூர்த்தி அவர்கள் 06-10-2021 புதன்கிழமை அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை – தங்கமணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருமைத்துரை மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற லீலாவதி (கமலாம்பிகை) அவர்களின் அன்புக் கணவரும், கணேஷ்ராஜ், ராதாகிருஷ்ணன், சாந்தி, சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,இராஜேஸ்வரன், ஜெயபாலசிங்கம், தவயோகினி, பிரேமா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வல்லிபுரம், சந்திரலிங்கம், பரிமளாதேவி, தனபாக்கியலட்சுமி, சீதாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரூபசவுந்தரி, திருஞானசம்பந்தமூர்த்தி, இராசதுரை, சந்திரதாஸ், சந்தானலட்சுமி, யோகாம்பிகை, செல்வராஜா, கனகசிங்கம், ஜெகதாம்பிகை, சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,தினஹர்– வினுஜா, சஞ்ஜீவ், துர்க்கா, மயூரன், மோனிஷா, சந்தோஷ், ரொஷான், சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு:
Sunday, 10 Oct 2021 7:30 AM - 9:00 AM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

கிரியை:
Sunday, 10 Oct 2021 9:00 AM - 10:30 AM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ராஜன் - மகன்**
**Mobile : +16478283655**

தகவல்:
**குடும்பத்தினர்**

# சட்டவிரோத அகழ்வுப் பணி: அறுவர் வசமாக மாட்டினர்!

*கொழும்பு, ஒக். 10*

*வெலிக்கந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அசேலபுர பிரதேசத்தில், தொல்பொருட்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சட்டவிரோத அகழ்வுப் பணியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் அறுவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். வெலிக்கந்தை, குளியாப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20, 23, 29, 33, 37, 59 வயதுகளையுடைய அறுவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*இதன்போது அகழ்வுப் பணிக்கு பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.*

*கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.* (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்- சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள் தலைவர் இந்து குருமார் அமைப்பு
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-தூள்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

**இரவு**
7.00 மணி : SPOTLIGHT - தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்
10.00 மணி:- நேர்கொண்ட பார்வை - பிரமிலால் கொஸ்தா-முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் tv

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு